# சத்திய வேத பாதுகாவலன்

Telegram: "CATHOLIC PRESS", JAFFNA. 1876-ம் வருஷம் ஆரம்பிக்கப்பட்டது Telephone: No. 300.

REGISTERED AT THE CEYLON G. P. O. AS A NEWSPAPER.

"கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வியர்த்தம்"

83-ம் புத்தகம் | யாழ்ப்பாணம் 1958-ம் ஆண்டு வைகாசி மாதம் 15-ந் திகதி வியாழக்கிழமை — பிரதிசதம் 10 | 18-ம் இலக்கம்


## சுதேச வர்த்தமானம்

### தமிழ்ச்சர்வகலாசாலைக்கு எதிர்ப்பு

தமிழ்ச் சர்வகலாசாலையொன்று ஸ்தாபிக்கப்படுவதைத் தாங்கள் ஆட்சேபிப்பதாகப் பிரிவினைபாடசாலைகளின் பிரதிநிதிகள்பலர் சர்வகலாசாலைக்கம்மிஷன் முன் சாட்சியம்அளிக்கையில் கூறியிருக்கின்றனர். இந்துக்களுக்கும், முஸ்லீம்களுக்கும் தனித்தனிச் சர்வகலாசாலைகளை ஸ்தாபித்துத்தான் இந்திய உபகண்டம் இரண்டாகப்பிரிக்கப்படுவதற்குத் தூண்டுகோலாக இருந்ததென்றும், இம்மாதிரியானசம்பவம் இலங்கையிலும்நடக்க இடமளிக்கக் கூடாதென்றும் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள்.

### சட்ட மறுப்பு இயக்கம்

தமிழுக்கு நியாயமான அளவு உபயோக அந்தஸ்துவழங்கும் சட்டத்தை எதிர்த்துச் சட்டமறுப்பு இயக்கம் ஒன்றை வருகிற ஆனி மாதத்திலே ஆரம்பிக்கப்போவதாகவும், தங்களது பிணங்களின்மேலேயே பிரதமர் நியாயமான அளவு தமிழ்உபயோக சட்டத்தைக் கொண்டுவர முடியுமென்றும் விமுக்திப்பெரமுனை என்ற முன்னணியின் கூட்டுக்காரியதரிசியும், முன்னாள் வெலிமடைப் பிரதிநிதியுமான திரு. கே. எம். பி. இராஜரத்தின அன்று பதுளையில் நடைபெற்ற கூட்டம்ஒன்றில் கூறியிருக்கின்றார்.

### தமிழரசுக்கட்சி மகாநாடு

தமிழரசுக்கட்சியின் வருடாந்தமகாநாடு இம்மாதம் 23-ம், 24-ம், 25-ம் திகதிகளாகிய வெள்ளி, சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் வவுனியாவில் நடைபெறவிருக்கின்றது. இதன் நிகழ்ச்சிகளில்கலந்துகொள்ளுமாறு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ், ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ்ஆகிய இருமலை நாட்டுக்காங்கிரஸ்களின் பிரதிநிதிகளும் அழைக்கப்பட்டிருக்கிறார்கள். யாழ்ப்பாணத்திலிருந்து சுமார் ஆயிரம் பேர் சைக்கிள்களிலே ஊர்வலமாக அங்குபோய்ச் சேரவிருக்கின்றார்கள். மன்னார், மட்டக்களப்பு, திரிகோணமலை ஆதியாம்இடங்களிலிருந்து அநேகர்சென்று மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கிறார்கள்.

### பெருமழையும் பெருவெள்ளமும்

தற்போது பெய்துகொண்டு வரும் பெருமழைகாரணமாக நாட்டின் பல பகுதிகளில் — விசேஷமாய் நாத்தாண்டியா, சிலாபப்பகுதியில் பெருஞ்சேதம் ஏற்பட்டிருக்கிறது. சென்ற சனிக்கிழமைமாலைமுதல் நாத்தாண்டியா, சிலாபப்பகுதியில் உண்டானவெள்ளத்தால் 3,000 வீடுகள்வரை வெள்ளத்தில்மூழ்கிக் கிடக்கின்றன. பல கிராமங்கள் ஒன்றுடனொன்று தொடர்பற்றிருக்கின்றன 2,500 பேருக்குமேல் வீடுவாசல்களை இழந்து தவிக்கின்றார்கள். நாத்தாண்டியாமுழுவதும் தண்ணீரில் மூழ்கியது இதுவேமுதன்முறையாம். வெள்ளத்தில் அகப்பட்டுத் தவிப்பவர்களுக்குப் பங்கீட்டரிசியும், மற்றும் உணவுப்பொருட்பார்சல்களும் வத்தைகள்மூலம் அனுப்பிவைக்கப்படலாயின.

### 306 வேலைநிறுத்தங்கள்

இலங்கையிலே சென்ற 1957-ம் ஆண்டில் 306 வேலை நிறுத்தங்கள் நடைபெற்றனவென்றும், இதுகாரணமாக ஏழுலட்சத்துக்குமேற்பட்ட தொழிலாளரின்உழைப்புநாட்கள் வீணாய்ப் போயினவென்றும் அரசாங்கதொழில் 'கெசற்'மூலம் தெரியவருகிறது. சென்ற ஆண்டில்நடைபெற்ற 306 வேலை நிறுத்தங்களில் 177 வேலைநிறுத்தங்கள் தோட்டப்பகுதிகளிலேயே நடைபெறலாயின.

### தென்னைச்செய்கைக்குக் காணிகள்

தென்னைப்பயிர்ச்செய்கைக்குவாய்ப்பாய் யாழ்ப்பாணத்தில் 9,800 ஏக்கரும், வவுனியாவில் 8,000 ஏக்கரும், மன்னாரில் 400 ஏக்கரும், திரிகோணமலையில் 3,500 ஏக்கரும், மட்டக்களப்பில் 7,500 ஏக்கரும் இருப்பதாகக் காணிமந்திரி காரியாலயத்தைச்சேர்ந்த காணிஉபயோகக்கம்மிற்றி தெரிவித்துள்ளது. இக்காணிகளைக் கூட்டுறவுக் குடியேற்றதிட்டங்களுக்குப் பயன்படுத்தக் காணிமந்திரி உத்தேசித்திருக்கின்றார்.

### பற்றுச்சீட்டுக்குப் பத்துச்சத முத்திரை

முத்திரைச் சட்டதிருத்தம் செனற்சபையிலும் நிறைவேறிவிட்டது. இது கவர்னர்-ஜெனறலின் அங்கீகாரத்துக்கு அனுப்பிவைக்கப்பெற்றுக் கெசற்றில் பிரசுரமானதும் 20ரூபாவுக்கும், அதற்குமேற்பட்டதொகைக்கும் கொடுக்க வேண்டிய றிசீற்—அதாவது பற்றுச்சீட்டில் பத்துச்சதமுத்திரை ஒட்டப்படவேண்டும். இதுவரை இந்தப்பற்றுச்சீட்டுக்கு ஆறுசதமுத்திரையே ஒட்டப்பட்டுவந்தது.

### தொழிலாளரின் வேலைநிறுத்தம்

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனத்தைச்சேர்ந்த தொழிலாளர்கள் வேலைநிறுத்தஞ்செய்து இருபதுதினங்கள் ஆகிவிட்டன. ஆயினும் சமரசம் ஏற்பட்டு அவர்கள்மீண்டும் வேலைக்குத் திரும்புவதற்கான அறிகுறிகள் தென்படுவனவாயில்லை. தங்கள் கோரிக்கைகளை நிறைவேற்றினாலன்றித் தாங்கள் வேலைக்குத் திரும்புவதில்லையென்று தொழிலாளர்கள் தெரிவித்துள்ளார்கள். முதலாளிகள் அவர்களின் கோரிக்கைகளுக்கு விட்டுக்கொடுப்பார்கள் போல் தெரியவில்லை. அதனால் ஏற்றுமதிவர்த்தகமே ஸ்தம்பித்துவிடக்கூடிய அபாயநிலை ஏற்பட்டுள்ளது.

### நீராவிக்கப்பல்வாங்கும் தீர்மானம்

வடமாராட்சி ஐக்கியமோட்டார்பஸ் சேவைச்சங்கம் சமுத்திரவழியாக ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்கும், பிரயாணிகள் போக்குவரத்துச் செய்வதற்குமாக ஓர் நீராவிக்கப்பலை வாங்குவதெனத் தீர்மானித்திருக்கிறது. இலங்கைப் போக்குவரத்துச்சபை சென்ற தைமாதம் 1-ந்திகதியன்று சங்கபஸ்களை எடுத்துக்கொண்டது. இதனால் அச்சபை சங்கத்திற்கு ஒருலட்சத்து ஐயாயிரம்ரூபா நஷ்டஈடாகக்கொடுக்க வேண்டுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தப்பணம்கொடுபடும்போது அதைக் கொண்டு ஓர்நீராவிக் கப்பலைவாங்கி இலங்கைக்கரைமார்க்கமாக ஏற்றுமதி இறக்குமதிவர்த்தகத்தில் ஈடுபடலாமெனச் சங்கநிர்வாகசபை சிபாரிசுசெய்திருக்கின்றது.

### அர்ச். சூசையப்பர் திருநாள்

கொழும்புத்துறைத் தாபனத்திலே கோவில்கொண்டு எழுந்தருளித் தம்மை அண்டிவருவாருக்கெல்லாம் அன்புமிக்க அடைக்கலப்பிதாவும், தொழிலாளர்களின் பாதுகாவலருமான அர்ச். சூசையப்பர்திருநாள் இம்மாதம் 18-ந் திகதியாகிய வருகிறஞாயிற்றுக்கிழமை வழமைபோல அப்பதியிலே அதிசிறப்பாய்க் கொண்டாடப்பட விருக்கிறது. அன்றுகாலை 6-30மணிக்குத் திருநாள் பாடற்பூசை நிறைவேறும். பிற்பகல் 4-15மணிக்கு வேஸ்பர்பாடி முடிந்ததும், திருச்சுரூப சுற்றுப்பிரகாரத்தோடும், திவ்வியசற்பிரசாத ஆசீர்வாதத்தோடும் திருநாள்முடிவாகும். இந்தத்திருநாளின்போதே இலங்கையின் இராட்சாபிதாவாகிய அர்ச். சூசையப்பரின் திருஅடைக்கலத்திலே யாழ்ப்பாண மேற்றிராசனமுழுவதும் பகிரங்கமாகநேர்ந்து ஒப்புக்கொடுக்கப்படுவது அன்றுதொட்டுள்ள ஓர்வழக்கமாகும். ஆதலால், அர்ச். சூசைமாதவனின் பக்தர்களெல்லாம் முன்வருடங்களிற்போன்று இம்முறையும் அப்பதியிலே பெருந்திரளாகச் சமுகமளித்துத் தங்கள்மேலும், தங்கள்குடும்பங்கள் மேலும், தங்கள் செல்வநாட்டின் மேலும் அவரின் தவறாதஅடைக்கலத்தையும், ஆசீர்வாதத்தையும் இரந்து கொள்வார்களாக!

### சயரோகதடைப் பிரசாரம்

அடுத்துவரும் ஆனிமாத முதல்வாரத்திலே நடைபெறவிருக்கும் அகில-இலங்கைச் சுகாதாரவிழாவின்போது சயரோகத்தடைப் பிரசாரவேலைகளை மேலும் தீவிரப்படுத்துவதெனச் சயரோகநிவாரண தேசியசங்க யாழ்ப்பாணக்கிளை தீர்மானித்துள்ளது. சயரோகத்தடைப்பிரசாரவேலைகளைத்துரிதமாகநடத்துமாறும், சுகாதாரவிழாக் கொண்டாட்டங்களின்போது இதற்கு முக்கியஇடம் அளிக்குமாறும் யாழ்ப்பாணக்கிளைச்சங்கம் வடபகுதியிலுள்ள சுகாதாரவிழாக் கம்மிற்றிகளைக்கேட்டிருக்கிறது.

### பாவனைக்குஉதவாத பஸ்கள்

பஸ்முதலாளிகளிடமிருந்து எடுக்கப்பட்ட பஸ்களிலே நூற்றுக்குமேற்பட்டவைகள் கடந்தஐந்துமாதங்களிலும் பாவனைக்கு உதவாதனஎன்று ஒதுக்கிவிடப்பட்டுள்ளன பஸ்போக்குவரத்துச்சபை இவ்வருடம்முடிவதற்குள் மேற்கொண்டும் முந்நூறுபஸ்களைப் பாவனைக்கு உதவாதன என்று விலக்கிவிடுமென எதிர்பார்க்கப்படுகிறது. பஸ்முதலாளிகளிடமிருந்து எடுத்துக் கொள்ளப்பட்ட ஒவ்வோர்பஸ்ஸையும் திருத்திச்சரிப்பிடிக்க இதுவரை பஸ்போக்குவரத்துச்சபை பெருந்தொகைப்பணம்செலவிட்டிருக்கிறது. அதாவது, ஒவ்வொன்றுக்கும் 5,000ரூபாவுக்குமேல் செலவிட்டிருக்கிறதாம்.

### எட்டுக்கோடி றுத்தல் தேயிலை

இலங்கைத் தொழிற்சங்க சம்மேளனம் நடத்திவரும் வேலைநிறுத்தங் காரணமாக 8 கோடி றுத்தல்தேயிலை தேங்கிக்கிடக்கின்றது. இந்த வேலைநிறுத்தத்தால் கொழும்பில் நடைபெறவிருந்த இரு தேயிலைஏலவிற்பனைகள் நிறுத்தப்படலாயின. விற்பனைக்கென்று வைக்கப்பட்டிருந்த 3 கோடி றுத்தல்தேயிலை விலைப்படாமல் இருக்கின்றது. வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படவேண்டிய 1கோடியே 70 லட்சம் றுத்தல்தேயிலை தேங்கிக்கிடக்கின்றது. பெருந்தொகையான தேயிலை தேங்கிக்கிடப்பதால் தேயிலைவிலை வெகுவாகக் குறைந்து விடுமென்று சொல்லப்படுகிறது.

——:——

● யேசுவின் ஜோர்னெற் இபார்ஸ் என்ற ஸ்பானியகன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளும் வைபவம் சென்றசித்திரை27-ந்திகதி நிகழலாயிற்று. சென்றபங்குனிமாதம் 28-ந்திகதியைக்கொண்ட அதிகாரப்பத்திரம்ஒன்றிலே இந்தக்கன்னியாஸ்திரிக்கு முத்திப்பேறுபெற்றபட்டம் அருளுவதற்கான அங்கீகாரத்தைப் பாப்பரசர் வழங்கியிருந்தவர்.

● சுவெஸ்கால்வாயின் அகலத்தை இருமடங்காக்கும் திட்டம் ஒன்றை எகிப்து தயாரித்திருக்கின்றது. இந்தத் திட்டத்துக்குப் 12 கோடியே 30லட்சம்பவுண் செலவாகுமென்று கால்வாய்அதிகாரிகள் தெரிவித்திருக்கிறார்கள். கால்வாயின்அகலம் இருமடங்காக்கப்படுமிடத்து, தற்போது தினமும் 80 கப்பல்கள் போகிறவிடத்திலே 200 கப்பல்கள் போகமுடியுமாம்.

● நியூகினியாதீவிலே வீவாக்விக்காரியம் 32,000 சதுரமைல் விஸ்தீரணமுடையதாகும். மிகப்பரந்த தேசப்பரப்பைஅடக்கிய இந்த விக்காரியத்தை இலகுவில் ஞானவிசாரணைசெய்யத்தக்கதாக ஆஸ்திரிய கத்தோலிக்கமக்கள் அதன் மேற்றிராணியாரான ஆக்பெல் ஆண்டவருக்கு இருஆசனங்களைக்கொண்ட ஆகாயவிமானம்ஒன்றை வாங்கிக்கொடுத்திருக்கிறார்கள்.

● ஸ்பெயினிலே கொறுணா எனுமிடத்தைச் சேர்ந்தவர்களும், முறையே 20—26வயதுடைய இருசகோதரிகள் தற்போது லண்டன்நகரிலே வீட்டுப்பணியாளராக வேலைசெய்து, வாரம்ஒன்றுக்கு 4பவுண் 10சிலின் உழைத்து, ஸ்பானியகுருமடம்ஒன்றில் தற்போதுபடித்துவருகின்ற தங்கள் இளையசகோதரர்கள் இருவரும்குருமாராகும்படியாய் மாதந்தோறும் 20 பவுண் அனுப்பிவருகின்றார்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புனிதவளனார் ஆசிரியகலாசாலை,
கொழும்புத்துறை.
11-5-58.

## ஞானோபதேச உபகரணக் காட்சி

**பாலர்குறிப்பிடம், சின்னக்குறிப்பிடம்** என்னும் ஞானோபதேச நூல்களைப் பயன்பட உபயோகிப்பதற்கு உதவியாக இக்கலாசாலையின் ஆசிரிய மாணவ-மாணவிகளால் தயாரிக்கப்பெற்ற **பாடக்குறிப்புகளும் உபகரணங்களும்** நிகழும் வைகாசி மாதம் 17-ம், 18-ம் திகதிகளில் மேற்படி கலாசாலையில் காட்சிக்கு வைக்கப்பட்டிருக்கும். இக்காட்சிக்குக் கத்தோலிக்க ஆசிரியர் அனைவரும் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

### விசேஷ நிகழ்ச்சிகள்

17-ம் திகதி மு. ப. 9 மணிக்கு — காட்சித் திறப்புவிழா.
,, மு. ப. 11 மணிக்கு — மாதிரிப்பாடம்.
,, பி. ப. 4 மணிக்கு — மாதிரிப்பாடம்.

**சுவாமி வ. தீயோகுப்பிள்ளை,**
அதிபர்

# மட்டக்களப்பு தாண்டவன்வெளித் தபால்

**மரியாயின் சேனை, ஆஷியஸ் ஆராதனை:** நிகழ்மதி 20-ம்நாள் ஞாயிறுவாரம் பிற்பகல் 4-30மணிக்கு கமதுபங்குத் தேவாலயத்தில் மரியாயின் பட்டாளத்தினர் ஒன்றுகூடினர். மாசில்லாமாதா—பட்டாளத்தலைவி—நம்தேவஅன்னையின் திருச்சுரூபமானது வெண்ணிறமலர்கள், தீபங்களிடையே அலங்கிர்தமாகக் காட்சியளித்தது.

குருப்பிரசாதிகள், சஞ்சூசையப்பர் சபை ஞானச்சகோதரர்கள், கன்னியர்கள், மரியாயின்சேனையைச் சேர்ந்த தீவிர-உதவி அங்கத்தினர், பக்திச்சபைகளின் அங்கத்தினர், பங்குக்கிறீஸ்துவர்கள், புளியந்தீவு மரியாயின்சேனை அங்கத்தினர்களாகப் பெருந்தொகையினர் சமுகமளித்திருந்தனர்.

திரிகோணமலை மேற்றிராசன கத்தோலிக்கசேவை அதிபர் வண. ஈ. கிறவுதர், எஸ்.ஜே. சுவாமிகள் தலைமையில் எல்லோரும் தூயஆவியானவரின் உதவியையிரந்து பாடியபின்னர் நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. நம்பங்குக்குரவரும், பட்டாளஅத்தியட்சக குரவருமான வண. ஜி. ஈ. எல். வம்பேக்சுவாமிகள் நிகழ்ச்சிகளை ஒழுங்குடன் வழிநடாத்திக் கொண்டிருந்தார். ஆரம்ப செபத்தின்பின் எல்லோரும் ஏகோபித்துச் செபமாலைஓதினர். வண. கிறவுதர் சுவாமிகளால் மரியாயிபட்டாளத்தினரின் சேவைபற்றிவிளக்கும் சிறந்ததோர்பிரசங்கம் ஆங்கிலத்தில்செய்யப்பட்டது. நிகழ்ச்சிகளினிடையே மரியாயின்புகழினை ஆங்கிலத்திலும், தமிழிலும் பாடிமகிழ்ந்தனர். பின்னர் ஒவ்வொருவராய் மாதாவின் திருச்சுரூபபாதத்தில் தங்கள்வாக்குத்தத்தங்களைப் புதுப்பித்தனர். எல்லோரையும் மாதாவுக்கு ஒப்புக்கொடுத்து முடிந்ததும், "கற்றீனா" என்னும் சங்கிலிச் செபம் சொல்லப்பட்டது. பின்னர் நமது பங்குக்குரவரால் மரியாயின் சேனைசெய்யும் சேவைபற்றி விரிவாக விளக்கும் அரியதோர்பிரசங்கம் தமிழில்செய்யப்பட்டதும், வண. கிறவுதர் சுவாமிகளால் தேவநற்கருணை ஆசீர்வாதம் அருளப்பட்டது. இறுதிச் செபத்தின்பின்

"மாதாவே! சரணம்உந்தன்
பாதாரம் புவிக்காதாரம்—கன்னி
மாதாவே சரணம்

என்னும்பாடல் பாடசாலைப்பாலியர் பாலிகைகள்முதல் சமுகமளித்திருந்தார் அனைவராலும் மிகஅருட்சிக்குரியவிதமாகப் பாடப்பெற்றதுடன் ஆராதனை இனிதேமுடிவாயது.

**சதாசகாயமாதா நோவனைப் பத்திமுயற்சி நாலாவதாண்டு நிறைவுவிழா:** சதாசகாயமாதாவின் நோவனைப்பத்திமுயற்சி நமதுபங்கிற் தொடங்கிய நாலாவதாண்டு சென்ற புதன்வாரம் (23-4-58) பூர்த்தியானது. இத்தினத்தை மாதாவின்பக்தர்கள் வெகுபத்தியருட்சியாகக் கொண்டாடினர். அதிகாலை பாடற்பூசையும், பிற்பகல் செபமாலை, படமாதா, சகாயமாதாவின வரலாறுகள்பற்றிச் சிறந்ததோர் பிரசங்கமும், மாலையாராதனையும், திவ்வியநற்கருணை ஆசீர்வாதமும் பங்குக்குரவரால் நடாத்திவைக்கப்பட்டன. வழமைப்பிரகாரம் நோவனை முடிவில் சமுகமளித்திருந்தோர்க்கு ஆசீர்வதிக்கப்பட்ட அப்பம் மாதாவின் பெயரால் அளிக்கப்பட்டது. சதாசகாயமாதாவின் படமானது நீலம், வெள்ளை வர்ணங்கள்கொண்ட மலர்கள், தீபங்கள், பீடவிரிப்புகளால் கண்கவர்முறையில் அலங்கரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**பங்குக்குரவரும் பெயர் கொண்ட பெருநாளும்:** அன்று தினம் (23-4-58) எம்பங்குக்குரவரின் பெயர்பூண்ட பெருநாள்தினம். அர்ச். ஜோர்ஜியாரின் திருச்சுரூபமானது ஆலயத்தில் அழகுறச்சிங்காரித்து வைக்கப்பட்டிருந்தது. பங்குக்கிறீஸ்துவர்கள் பூசைகண்டு, திருவிருந்தருந்திச் சகாயமாதாவினதும், அர்ச். ஜோர்ஜியாரினதும் சலுகையை வேண்டிப் பங்குக்குரவரின் ஆன்மசரீர நலன்களுக்காக மன்றாடினர். அநேகர் சுவாமிகளின் இல்லஞ் சென்று, நல்லுரைகூறி அன்பளிப்புகள் அளித்து ஆசீர்பெற்றனர். அன்று குருமனையைச்சார்ந்தோருக்கும், ஆலயகட்டட நிர்வாகிகளுக்கும் குருமனையில் சம்பிரமமான மதியவிருந்து சுவாமியவர்களால் அளிக்கப்பட்டது. எம்பங்குக்குரவர் தமதுபெயர்கொண்ட அர்ச்சியசிஷ்டரின் பாதுகாவலில் பல்லாண்டு வாழ்க!

—நிருபர்.

# பிரியாவிடை வைபவம்

உயிலங்குளம், கத்தோலிக்கசிரேஷ்ட பாடசாலையில் சென்ற ஆறேகால்வருடங்களாகச் சிறப்பாகத்தொண்டாற்றி வந்து, அதனைஒருபடி முன்னேற்றி வைத்த தலைமைஆசிரியர் திரு. எஸ். அந்தோனிப்பிள்ளை அவர்களின் எதிர்பாராத மாற்றத்தைப்பற்றி அறியவந்த உதவிஆசிரியர்களும், மாணவர்களும், பெற்றோரும் ஆற்றொணாத் துன்பினராய் ஏகோபித்தெழுந்து அன்னாருக்குச் சிறந்தபிரியாவிடைகள் நிகழ்த்தலானார்கள்.

30-ந்திகதிநண்பகல் கட்டளைக்குரவர் வண. எம். இம்மனுவேல் சுவாமியவர்கள் தலைமையிலே ஆசிரியர், மாணவர்களின் பிரியாவிடைவிழா அமைதியாக நடைபெறலாயிற்று. அப்போது தலைமைஆசிரியரும், அவருடன் மாற்றமாகிச்செல்லும் ஆங்கிலஉதவிஆசிரியை செல்வி மேரிஅஞ்சலாவும் இருகுரவர்கள் சமேதராய் உயராசனத்தமர, எஸ். எஸ். சி. மாணவர்கள்: வி. துரைசிங்கம், எஸ். மரியாம்பிள்ளை, எஸ். ஈசாக்கு, ஆசிரியர் எஸ். எஸ். பிகுரூடோ, தலைவர் ஆதியோரால் பிரியாவிடைநாயகர்களின் சேவைநலன்களைப்பாராட்டிச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்பெற்று, அன்பளிப்புகள் வழங்கப்பட்டன.

மறுநாள் 1-ந்திகதிமாலை பிரியாவிடைநாயகருக்கும், பாரியாருக்கும் பெற்றோரால் வண. மரியதாசன் சுவாமியவர்கள் தலைமையில் பரிமளிப்பான பிரியாவிடைஒன்று விம்மல்பொருமல், பெருமூச்சுகளிடையே அருளப்படலாயிற்று. ஆரம்பத்தில்இருவரும் மலர்மாலைகள் அணியப்பெற்று வரவேற்கப்பட்டதும், பழையமாணவர் செல்வன் எஸ். அந்திரேசால் பிரிவோபசாரப்பத்திரம் படித்துவழங்கப்பட்டது. அதன்மேல் ஆசிரியர் பி. எஸ். மாட்டின்அவர்கள் பேசியபோது: தற்சமயம் தலைமன்னாருக்கு மாற்றமாகிச்செல்லும் தலைமைஆசிரியர் அந்தோனிப்பிள்ளை அவர்கள் இப்பாடசாலைக்குவந்தபோது இது ஓர்ஆரம்பபாடசாலையாகவேஇருந்தது; ஆனால், அவரது அயராமுயற்சியால் இது தீவிரமுன்னேற்றமடைந்து 1-1-58உடன் சிரேஷ்டபாடசாலையாகியிருக்கிறது; அவர்முகத்தில் கோபக்குறி ஓர்போதும் காணப்படவில்லை; எந்நேரமும் புன்சிரிப்பே தாண்டவமாடிவந்தது; அன்றியும் கட்டளைக்குரவருக்கு ஓர் வலதுகரம்போல்இருந்து அவர்தொண்டாற்றி வந்துள்ளார்; அவர்பாரியார் பெருமுயற்சியெடுத்துத் திருச்செபமாலைக் கூட்டத்தை நடத்திவந்தாரெனக் குறிப்பிட்டார். தொடர்ந்து ஆசிரியர் எஸ். எஸ். பிகுரூடோ, திரு. கோவிந்தராசா, தலைவர் ஆதியோரால் பாராட்டுரைகள் வழங்கப்பட்டன. சிறுபணமுடிப்பு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

ஈற்றில், பிரியாவிடைநாயகர் நன்றியுரைகூறியதும், சகலரும் ஒருங்குதிரண்டு ஆடல்பாடல்களுடன் அவரைப் பாலைக்குளியிலுள்ள அவரதுஇல்லத்திற்கு அழைத்துச்சென்று விடைபெற்றுத் திரும்பினார்கள்.

**ஜே. யோசேப்பு,**
பழையமாணவன்.

**"ஒற்றுமையீனம் வலிமையை அழிக்கும்; தீயஒழுக்கம் உடம்பை அழிக்கும்."**

## ஸ்ரீமதி செசீலியா நல்லம்மா சாமுவேல் அவர்களின் அமரதின நினைவு

### 20—5—58 (மூன்றாம் ஆண்டு)



"எத்தனை நாள்சென்றாலும் இவளையாம் மறத்தற்கில்லை
உத்தமி நமக்குச்செய்த உறுதுணை உன்னுந்தோறும்
நித்திய அமைதிசாந்தம் நிம்மதி இவளுக்கெய்த
கத்தனை வேண்டலன்றிக் கடமைவே றில்லைமாதோ."

ஆன்ம சாந்திக்காகத்
திவ்விய பூசைப்பலி நிறைவேற்றப்படும் இடங்கள்:

**19-5-58** திங்கட்கிழமை
வெற்றிநாயகி ஆலயம், பேசாலை.

**20-5-58** செவ்வாய்க்கிழமை
(1) பாத்திமாகிரி, பண்டத்தரிப்பு.
(2) காணிக்கைநாயகி ஆலயம், மட்டக்களப்பு.
(3) புனித யுவானியார் ஆலயம், சுண்டிக்குளி.
(4) திருக்குடும்பக் கன்னியர்நிவாச சிற்றாலயம், யாழ்ப்பாணம்.

☞ இதைக் கண்ணுறும் வண. குருப்பிரசாதிகளே! சங். கன்னியர்களே! அன்பர்களே! எங்களை விட்டுப் பிரிந்தாலும், எங்கள் மனதை விட்டுப் பிரிக்கவியலாத இவ்வான்மாவுக்காக வேண்டிக்கொள்ளுமாறு விநயமாகக் கோருகிறோம்.

பிள்ளைகள்:
திருமதி தெரேசா பிரான்சீஸ் (ஆசிரியை)
சார்ஜன்ட் யோசவ் (S. E.)
சாமுவேல் பெனடிக்ற் (ஆசிரியர்),
மேரிறேஸ் பிளசம் சாமுவேல் (ஆசிரியை)

கணவர்:
**நீக்கிலாப்பிள்ளை சாமுவேல்**
(இளைப்பாறும் ஆசிரியர்)

மருமக்கள்:
**எஸ். பிரான்சிஸ் (ஆசிரியர்)**
**திருமதி றீற்ரு மகிழ் யோசவ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஏழுவருடகால பலவந்த வேலை

44வயதுடைய சீனயேசுசபைக் குரவரான வண. ஹுவாங் ரா வோ-செங்சுவாமியார் கம்யூனிஸ்த சீனாவின் "சைபீரியா" என்று அறியப்படுகின்ற ரிசிவ்காய் பகுதியிலிருந்து சமீபத்திலே விடுதலை செய்யப்பெற்றிருக்கின்றார். அங்கே இவர் பலவந்தவேலை முகாம் ஒன்றில் ஏழுவருடகாலம் இருந்துவரலானார். ரிசிவ்காய் என்பது வடமேற்குச் சீனாவிலுள்ள ஓர் உயர்ந்த பீடபூமியாகும். தன்னகத்துள்ள பொன், வெள்ளி, நிலக்கரி, ஈய, துத்தநாகச்சுரங்கங்களால் பெயர்பெற்றது. ஆனால், தாங்கமுடியாத குளிர்ந்த சுகாத்தியமுள்ளது.

---

### கப்பல்களின் வழிகாட்டியான திருச்சுரூபம்

தென்னமெரிக்காவைச் சேர்ந்த எக்குவடோர் நாட்டிலே குவாயாக்குயில் எனுமிடத்தில் 187 அடி உயரமான திருஇருதயஆண்டவரின் பிரமாண்டமான சுரூபம் ஒன்று, அந்நாடு திருஇருதயநாதருக்கு நேர்ந்து ஒப்புக்கொடுக்கப்பட்டதன் ஞாபகமாகவும், கரையைநோக்கி வந்துகொண்டிருக்கும் கப்பல்களுக்கெல்லாம் ஓர்வழிகாட்டியாகவும் கடலுக்குமேலாகக் காட்சியளிக்கும் ஓர் குன்றின்மீது ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சுரூபத்தின் செலவிற்கென்று ஐந்துலட்சம் பேருக்குமேற்பட்டமக்கள் பணம் உபகரித்திருக்கின்றார்கள்.

---

### அர்ச்சியசிட்டவளைச் சுவீகாரஞ்செய்த குடும்பம்

ஓர் ஐரிஷ்ஆசிரியைக்கும், ஓர் அர்ச்சியசிட்டவளைச் சுவீகாரப்புதல்வியாக்கிக்கொண்ட ஓர் குடும்பத்தினரின் பௌத்திரர்க்கும் சமீபத்திலே ரோமாபுரி அர்ச். பேதுருவானவரின் மகாதேவாலயத்தில் திருமணம் நிறைவேறலாயிற்று. மணவாளியான ஆசிரியை அயர்லாந்தில் ஓமாஎனுமிடத்தைச்சேர்ந்த திருமதி மேரி டி'ஆர்சி எனும் பெண்மணியாவர். இத்தாலியிலே லுக்காநகரைச்சேர்ந்த மத்தியோ ஜியான்னி என்பவரே மணவாளர். இவரின் தந்தையாரும், பாட்டனாருமே தற்போது அர்ச். ஜெம்மா கல்கானி என அறியப்படுகின்ற அணுதையை அப்போது ஓர் சுவீகாரப்புதல்வியாக ஏற்றுப் பரிபாலித்துவந்தவர்கள்.

---

### கிறீஸ்துநாதரின் சினிமாப்படம்

இத்தாலிய சித்திரவேலைப்பாடுகளிலே அதிகம் தலைசிறந்தவைகளைப் பயன்படுத்திக் கிறீஸ்துநாதருடையவும், தேவமாதாவுடையவும் வாழ்க்கைவரலாற்றின் சினிமாப்படம்ஒன்று இத்தாலிய நூதனபொருட்காட்சிச் சாலைகளிலும், கோவில்களிலும் தயாரிக்கப்பட்டுவருகிறது. இதனைத்தயாரித்துவருகிறவர் திரு. லூய்றி பாறிஸி அவர்களே. இன்னும் ஆறுமாதகாலத்தில் இதனைத் தயாரித்து முடித்து விடலாமெனத் தாம்நம்புவதாக இவர்தெரிவித்திருக்கின்றார். தேவதாயாரின் சீவியவரலாற்றுக்கு அடிப்படையாகக் கியொற்ரோ, பிறா அஞ்ஜெலிக்கோ என்பவர்களின் சித்திரவேலைப்பாடுகள் உபயோகிக்கப்படவிருக்கின்றன. திவ்விய கர்த்தரின் வாழ்க்கைவரலாறானது ரின்ரோறெற்ரோ, வெரோனீஸ், ரிற்றியான் என்பவர்களின் சித்திரவேலைப்பாடுகள் கொண்டு விளக்கப்படவிருக்கின்றது.

---

### மனந்திரும்பிய பூர்வீக குடிகள்

சீனத்தேசிய அரசாங்கத்தின் தாயகமாகிய போர்மோசாதீவின் பூர்வீககுடிகளான 602பேர் மனந்திரும்பிச் சென்றபங்குனி மாதம் 24-ந்திகதியன்று கூட்டமாக ஞானஸ்நானம்பெற்றுக் கத்தோலிக்கராகியிருக்கின்றார்கள். இவர்கள் புனன்என்ற சாதியைச் சேர்ந்தவர்கள். உயர்ந்தமலைகளில் சஞ்சரிப்பவர்கள். போர்மோசாதீவில் ஒரேதிருச்சடங்கில் இதற்குமுன் இவ்வளவு பெருந்தொகையானோர் கூட்டமாக ஞானஸ்நானம்பெறவில்லை. அர்ச். பிரான்சீஸ் சவேரியாருடைய காலத்துக்குப்பின் கீழ்த்திசைநாடுகளில் இவ்வளவு பெருந்தொகையானோர் ஓர்கூட்டமாகக் கத்தோலிக்கதிருச்சபையில் சேர்ந்துகொண்டதுமில்லை. போர்மோசாதீவில்வேறுவேறான ஒன்பது சாதிகளைச்சேர்ந்த 1,50,000 பூர்வீககுடிகள் வசித்துவருகின்றார்கள்.

---

### லூர்துபதிக்கு இந்திய திருயாத்திரை

லூர்துபதிக்கு இந்தியதிருயாத்திரைஒன்று வருகிறஆனிமாதம் 14-ந்திகதியன்று ஆரம்பமாகி நடந்தேறவிருக்கிறது. யாத்திரிகர்கள் அன்றுதினம் சென்னைநகரிலிருந்து ஆகாயவிமானத்தில் புறப்பட்டு ரோமாபுரிபோய்ச் சேர்ந்து அங்குநான்குதினம் தங்கியிருப்பார்கள். பின்னர் அங்கிருந்து புறப்பட்டு லூர்துபதியை அடைந்து அங்கும் நான்குதினமும், அதன்மேல் பரீஸ்நகரில் மூன்றுதினமும், லண்டனில் மூன்றுதினமும், பிறசெல்ஸ்நகரில் மூன்றுதினமும், ஜெனிவா நகரில் மூன்றுதினமும் தங்கிய பின் பம்பாய்வழியாகச் சென்னைநகர் வந்துசேருவார்கள். இவர்கள் பிறசெல்ஸ்நகரில் தங்கியிருக்கும்போது, அங்கு பிரஸ்தாபமாக நடந்தேறும் சர்வதேசபொருட்காட்சியைக் கண்டுகொள்வார்கள். யாத்திரைமுழுவதும் விமான மார்க்கமாகவே நடந்தேறும்.

---

### போலிஷ் கத்தோலிக்க சர்வகலாசாலை

ரூஷிய இரும்புத்திரைக்குப்பின்னாலுள்ள ஒரேயொரு கத்தோலிக்கசர்வகலாசாலை போலாந்திலுள்ள லுபிளின் சர்வகலாசாலையே. பிரித்தானிய கத்தோலிக்கர் போலிஷ்இளைஞர்களின் கல்விக்கென்று தாராளமாக உதவிசெய்து வருகின்றார்கள். லுபிளின் சர்வகலாசாலையில் கல்விபயின்றுவருகின்ற 1,600 மாணவர்களின் உபயோகத்துக்கென்று அவர்கள் புத்தகங்களும், அவர்களின் கல்விக்குஉதவியாகப் பணமும் அனுப்பிவைக்கின்றார்கள். ஓர்மாணவன் அதிலேபடிக்க வருடம்ஒன்றுக்கு 800 ரூபா செலவேற்படுகிறது. தற்போது அதிலே 800 மாணவர்கள் இலவசமாகக் கல்விபயின்றுவருகின்றார்கள். இவர்களில் எவருக்கேனும் அரசாங்கம் உதவி செய்வதில்லை. பெரும்பாலும் போலிஷ் கத்தோலிக்க மக்களின் உதாரசிந்தைகாரணமாக அத்துணைபெருந்தொகை மாணவர்கள் இலவசசர்வகலாசாலைக்கல்வி பெற்றுவருகிறார்கள்.

---

### ரோமைநகரிலே யேசுசபையாரின்ஸ்தாபனங்கள்

ரோமைநகரிலே யேசுசபைக் குருமார் அநேகஸ்தாபனங்களை நிர்வகித்து நடத்திவருகின்றனர். இந்த ஸ்தாபனங்களில் கிறகோரியாரின் சர்வகலாசாலை, வேதாகமசம்பந்தமானஸ்தாபனம், கீழைத்தேசங்களின்ஸ்தாபனம், வத்திக்கான் வானொலிநிலையம், வத்திக்கான் வானசாஸ்திர அவதான நிலையம், பாப்பரசின் லத்தீன் அமெரிக்க குருமடம், பிறேசிலிய குருமடம், ஜேர்மனிய-ஹங்கேரிய குருமடம் என்பனவும் அடங்கியுள்ளன. இந்தஎட்டு ஸ்தாபனங்களையும், யேசுசபை அதிசிரேஷ்டரான மகாவண. ஜீன் ஜான்சென்ஸ்சுவாமிகளே இதுவரை நிர்வகித்துவந்தார். தற்போது உலகமுக்கியத்துவம்வாய்ந்த இந்த ஸ்தாபனங்கள் எட்டையும் நிர்வகித்து நடத்துமாறு ஓர்பிரான்சியரான வண. றெனே ஆர்னோ சுவாமியாரை அவர் நியமனஞ்செய்துள்ளார். வண. ஆர்னோ சுவாமியார் இதுவரை கிறகோரியாரின் சர்வகலாசாலையில் தத்துவசாஸ்திர கலாசங்கதலைவராய் இருந்துவரலானார்.

—(✡)—

# சர்வதேச பொருட்காட்சியிலே சர்வேசுரனின் நகரம்

உலகின் எந்தப்பகுதியிலாவது இதுகாலவரை நடந்திராத மாபெரும் பொருட்காட்சியாய்த் தற்போது பெல்ஜியதேச பிறசெல்ஸ் மாநகரில் அகில பொருட்காட்சி ஒன்று நடைபெற்று வருகின்றது. இந்தப்பொருட்காட்சியை 3 கோடியே 50 லட்சம் மக்களுக்குமேல் தரிசிப்பார்களென எதிர்பார்க்கப்படுகின்றது. பெல்ஜிய தலைநகரின் எல்லைப்புறமாகவுள்ள இராசநந்தாவனத்திலே, ஐஞ்ஞூறு ஏக்கர் விஸ்தீரணமான பகுதியிலே சென்றசித்திரைமாதம் 17-ந் தேதியன்று காட்சி திறந்துவைக்கப்படலாயிற்று. இதிலே உலகிலுள்ள 53 நாடுகள் கலந்து தங்கள்பொருட்களைக் காட்சிக்கு வைத்திருக்கின்றன.

இந்தப்பொருட்காட்சியிலே கத்தோலிக்கமக்களின் கண்ணையும், கருத்தையும் வெகுவாக ஈர்ந்துகொண்டிருப்பது "தேவனின் நகரம்" என்று சிறப்புப்பெயர் தாங்கியுள்ள வத்திக்கானின் அலங்காரகாட்சி மண்டபமேயாகும். கடவுள் மனிதனுக்கு இன்றியமையாது தேவைப்படுகின்றாரென்பதையும், இன்றியமையாத இந்தத்தேவையைப் பூர்த்திசெய்வதிலே திருச்சபையின்மகத்தானபணியையும் இதுசிறப்பாக வர்ணித்துக்காட்டுகின்றது. இந்தக்காட்சிமண்டபத்தைச் சென்ற சித்திரை 20-ந் திகதியன்று பெல்ஜியஅரசாங்கத்தினிடமாக இருந்துவருகின்ற பாப்பரசரின் ஸ்தானிகரான போர்னி அதிமேற்றிராணியாண்டவர் பெரும் ஆடம்பர வைபவங்களுடன் திறந்துவைத்தார். பெல்ஜியதேச திருச்சபைமேலதிகாரியான கருதினல் வான்ரோய் ஆண்டவர், இருபது அதிமேற்றிராணிமார், மேற்றிராணிமார், பெல்ஜிய அல்பேட்இளவரசர், மற்றும் ஆயிரக்கணக்கானகத்தோ[illegible] அவர்சென்று இதனைஆசீர்வதித்துத் திறந்துவைத்தார். நான்கு மேன்மாடத்தளங்களைக்கொண்டதாய் 7,50,000 பவுண்செலவில் அமைக்கப்பட்டுள்ள மிகப்பெரிய வத்திக்கான் காட்சிமண்டபத்திலே திருச்சபை தனது முழுச்சரித்திரத்தையும் எடுத்துக்காட்டாவிடினும் இக்காலசம்பவம்முழுவதையும் விளக்கிக்காட்டுகின்றது.

வத்திக்கான் காட்சிமண்டபத்தின் நடுநாயகமாக அதன்மீது 200 அடி உயரமான திருச்சிலுவைஒன்று பெருமிதமாக நிறுவி நிற்கின்றது. ஏறக்குறைய இதற்கு எதிர்முகமாக அமைந்திருக்கின்ற ரூஷியாவின் பிரமாண்டமான காட்சிமண்டபத்திற்கு மேலாக அது நிழல்விழுத்தி அதற்குச் சவால்விடுவதுபோல் உயர்ந்து நிற்கின்றது. அன்று ஞாயிற்றுக்கிழமை வத்திக்கான்காட்சி மண்டபம் அதிகாரபூர்வமாகத் திறக்கப்படுமுன்னரே ரூஷியர்கள்உட்பட அகிலநாடுகளையுஞ் சேர்ந்த பத்திரிகாசிரியர்கள், அதிகாரிகள் குழுக்கள் அதனைத் தரிசித்து, இன்றைய உலகப்பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதிலே கத்தோலிக்கதிருச்சபை கையாளும் பல்வேறுவழிவகைகளும், அகிலமுழுவதும் திருச்சபை பரக்கஆற்றிவரும்சமுதாயப்பணிகளும் காட்சிவாயிலாகத் துலாம்பரமாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கக்கண்டு தங்களுக்குண்டான பிரமிப்பைத் தெரிவித்து நின்றார்கள். உலகின் 53 நாடுகள் கோடிக்கணக்கானபவுண் செலவிட்டு, தன் தன்னுடையதுதான் தலைசிறந்ததென்று சொல்லும்படியாகத் தம்முளே போட்டியிட்டுக் கலந்துகொண்ட இந்த உலக பொருட்காட்சியிலேகத்தோலிக்க பொருட்காட்சியை ஒப்பற்றதாக் [illegible] இதுதான்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வைகாசி மாதம்

**பொதுக் கருத்து:** பெருதேச நகர்களில் ஆன்மவிசாரணை நலமுறநடைபெறுவதற்காக வேண்டிக்கொள்வது.

**மிஷன் கருத்து:** இந்தியாவில்லௌகிக வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதுபோல, ஆன்மீகவாழ்வு நிலைமையையும் உயர்த்துவதற்காக மன்றுடிக் கொள்வது.


சத்திய வேத
# பாதுகாவலன்

1958-ம் ஆண்டு
வைகாசி மாதம் 15-ந் திகதி


## பரலோக ஆரோகணமும் பரலோக சிந்தனையும்

யேசுக்கிறீஸ்துநாதர் பரலோகத்துக்கு ஆரோகணமான திருநாள் ஒருவகையில் நத்தால் திருநாளிலும் அதிக மகத்துவம் வாய்ந்ததெனச் சொல்லலாம். நத்தால்திருநாளில் உலகஇரட்சகர்ஒருவர் பூலோகத்துக்கு அருளப்பட்டார். ஆரோகணத்திருநாளில் உலகஇரட்சகர் தாம் செய்யவந்த இரட்சணிய அலுவலை முடித்துக்கொண்டு செயவீரனகப் பரலோகத்துக்கு மீண்டும்கொடுக்கப்பட்டார். நத்தால்திருநாளில் சுதனகியசர்வேசுரனின் மனுஷீகம் உலகுக்குப் பிரசித்தமாக்கப்பட்டது. ஆரோகணத்திருநாளில் அவரின் தெய்வீகமகத்துவம் உலகுக்கு அதிசயமாக விளங்குவதாயிற்று. நத்தால்திருநாளில் சுதனகிய சர்வேசுரன் மனுஷாவதாரஞ் செய்தமையால் அவர்சுயாதீனமாக ஏற்றுக்கொண்ட அவரது அத்தியந்ததாழ்ச்சியும், தாழ்ச்சியின் மறுக்கொண அடையாளங்களும் உலகோருக்கு விளங்குவனவாயின. ஆரோகணத்திருநாளில் அவரதுதெய்வீகத்துடன் இன்றியமையாது பொருந்தியிருந்தஅவரதுசர்வவல்லபபிரதாபம் எல்லாருக்கும் சொலிப்பதாயிற்று. நத்தால்திருநாளில் கன்னிசுத்ததேவதாயாரின் உதரமாகியதிருக்கோவிலிலிருந்து மகாமாட்சிமை பொருந்திய பரமஇரகசியங்கள் வெளிக்கொள்ளலாயின. ஆரோகணத்திருநாளில் பரலோகஜெருசலேம் என்னும் திருக்கோவில் திறக்கப்பட்டு அங்குள்ள பரமஇரகசியங்கள் வெளிகொள்ளலாயின. நத்தால் திருநாள் இரட்சணியஅலுவல் ஆரம்பமானநாள். ஆரோகணத்திருநாள் இரட்சணிய அலுவல் முடிசூட்டப்பட்டநாள். ஆகவே, முன்சொன்ன நியாயங்களின் நிமித்தம் ஆரோகணத்திருநாளிலே நத்தால்திருநாளிலும்பார்க்க நாமெல்லாம்அதிகம் ஞானமனேகரம் உள்ளவர்களாயும், பத்தியருட்சிகொண்டவர்களாயுமிருப்பது முறையாகும். நமது இந்த ஞானமனேகர — பத்தியருட்சி மத்தியில் நாம்சிந்திக்கவேண்டிய விசேஷபோதகம் ஒன்றுளது. யேசுக்கிறீஸ்துநாதர் தமதுபரமபிதாவிடம்செல்வது, அவரின் மாளிகையிலே எமக்கும் மாளிகைகளை ஆயத்தஞ்செய்வதற்கேயென்று ஏற்கனவே கூறியிருக்கின்றார். ஆதலால், இந்தப்பரலோக மாளிகைகளைப்பற்றி — அதாவது மோட்சபேரின்பத்தைப்பற்றியே நாம் இன்று தினம் விசேஷவிதமாகச் சிந்திக்கவேண்டும். அம்மாளிகைகளைச் சுதந்தரித்துக்கொள்ள நாம் யாதுசெய்யத்தகும் என்பதுபற்றி ஆலோசிக்கவேண்டும்.

பரலோகத்தில் சர்வேசுரன் தமதுதொண்டர்களுக்கு ஆயத்தப்படுத்தியிருக்கும் பேரின்ப பாக்கியங்களைக் கண்கண்டதுமில்லை, காது கேட்டதுமில்லை, இருதயம் உணர்ந்துகொண்டதுமில்லையென வேதமே முழங்குகின்றது. இவ்வுலகில் நமக்குள்ள குறைபாடுகள்ஒன்றும் மோட்சத்திலிராது. இவ்வுலகில் பசிபட்டினியாலும், தாகத்தினலும் நாம் வருந்துகிறோம். நமக்கு வேண்டிய உடையில்லாது குளிராலும், மற்றும்இடும்பைகளினலும் பரிதபிக்கிறோம். ஆனல், பரலோகத்தில் பசியுமில்லை, தாகமுமில்லை, குளிருமில்லை, கொடுகடியுமில்லை. சர்வேசுரனே தமதுபேரின்பமாகிய பரலோக போசனங்களினல் நம்மைத் திருப்திப்படுத்துவார். தமது இன்மொழிகளாகிய சீவியசலத்தினல் நமது தாகங்களைத் தீர்ப்பார். தமதுவரப்பிரசாதமாகிய மதிக்கரிய ஆடைஆபரணங்களினல் நம்மைஅலங்கரிப்பார். மோட்சஇராச்சியத்தில் துன்பமுமில்லை, துக்கமுமில்லை, கவலையுமில்லை, கஷ்டமுமில்லை, எவ்விதமான பிணியுமில்லை, நோக்காடுமில்லை. பரமானந்தமே தமதுசுபாவமாயுள்ள சர்வேசுரனின் ஆனந்தத்தில் மூழ்கியவர்களாய் மகிழ்ச்சி வெள்ளத்தில் அமிழ்ந்திப் பேரானந்தங்கொண்டு களிகூருவோம். மோட்ச இராச்சியத்திலே நமக்குள்ள மகாபாக்கியங்களுள் ஆகப்பெரும்பாக்கியம் சர்வேசுரனை முகமுகமாய்த்தரிசித்து, அப்பேரின்ப தரிசனத்தில் முற்றுமேசுவறப் பெற்றவர்களாய் அன்பேசுரூபமான சர்வேசுரனை நித்தியமும் போற்றிப்புகழ்ந்து வாழ்த்தித் துதித்துக்கொண்டிருப்போம். பரிசுத்ததேவதாயாரும், அர்ச். சூசையப்பரும், தூதர், அதிதூதர், ஞானதிக்கர், பத்திச்சுவாலகர், பலவத்தர், பத்திராசனர், நாதகிருத்தியர், பிராதமிகர், சத்துவகர் ஆகிய நவவிலாசசம்மனசுகளும் சேனைகளின் தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று மும்மடிச் சோபனம் இடைவிடாது கூறிக்கொண்டிருப்பர். நாமும் அதே மங்கள வாழ்த்துகளிற் பங்குபற்றுவோம்.

இவைகளெல்லாம் சர்வேசுரனல் நமக்கு நித்தியகாலமாக ஆயத்தஞ் செய்யப்பட்டவைகள் என்பதைச் சிந்திப்போமாக. நம்மையும் ஒருபொருட்டாகமதித்து எம்பெருமான் இவைகளைத் திட்டஞ்செய்திருக்கவும், அவைகளைமறந்தவர்களாய் அற்பசுகங்களை — அழிந்துஒழிந்துபோகும் நிசிதசந்தோஷங்களைத் தேடலாமா? ஆகவே, மோட்சபேரின்பத்தை நமக்கு நிச்சயப்படுத்தும்படியாக நமதுசீவியத்தை ஒழுங்குசெய்யப்பிரயாசைப்படுவோம். நமது இரட்சாபெருமான் பரலோகத்துக்குச்சென்றது நமக்கு மாளிகைகளை மோட்சஇராச்சியத்தில் ஆயத்தப்படுத்தும் படியாகவேயென அறிவோம். அம்மாளிகைகளில் நாம் ஒருநாள் வசிக்கும் பாக்கியமும், சிலாக்கியமும், சுதந்திரமும் வேண்டுமானல், அவர்குறித்த வழிவழியே பிசகின்றிச்செல்வோம். மானிட சட்டைசாத்தி அவர் இவ்வுலகில் சீவித்தகாலத்திலே அவர் சென்றவழி எதுவாகும் என்பதை நாம்அறிவோம். அவ்வழி பரிசுத்தத்தின்வழி, தேவ சித்தத்துக்குஅமைந்து நடப்பதாகிய வழி, இடையரூச்செபத்தின்வழி, உண்மையான உறுதியான விசுவாசத்தின் வழி, பூரணநம்பிக்கையின் வழி, தேவநேசம், பிறர்சிநேகம்என்னும் புண்ணியங்களின் வழி, கற்பின்வழி, தாழ்ச்சியின் வழி, தற்பரித்தியாகம், தன்னை மறுதலித்தல், உலகத்துக்குமரித்தவனய்ச்சீவித்தல், தபம்புரிதலாகிய சிலுவையின்வழி. இவ்வழியேசென்று நமது இரட்சாபெருமான் நமக்கு ஆயத்தப்படுத்தியிருக்கும் மோட்ச மாளிகையை அடைந்து தேவதிருமுகதரிசனை பெற்று நித்தியகாலம் பேரின் பஞ்சுகித்து உய்யக்கடவோம்.

---

● தோற்சுருள்களில் எழுதப்பெற்றுச் சாக்கடலின்பக்சமாகக் கண்டெடுக்கப்பட்ட வேதாகம மூலப்பிரதிகளில்ஒன்றை இஸ்ருயேல்அரசாங்கம் தற்போது பிறசெல்ஸ்நகரில் நடைபெற்றுவரும் சர்வதேசபொருட்காட்சியில் வைக்கவிருக்கின்றது. தற்போது இந்தச்சுருள் ஜெருசலேம் நகரிலுள்ள எபிரேயசர்வகலா சாலையில் இருந்துவருகிறது. பழையஏற்பாட்டு நூலின் வியாக்கியானமே இதில்அடங்கியுள்ளது. இந்தத்தோற்சுருள்களில் ஒன்று இஸ்ருயேல் நாட்டுக்குவெளியே கொண்டுபோகப்படவிருப்பது இதுவே முதன்முறையாகும்.

● பெல்ஜியதேச பிறசெல்ஸ்நகரில் ஆரம்பமாகியிருக்கும் சர்வதேச பொருட்காட்சியிலே வத்திக்கான் காட்சிமண்டபத்துக்கு எதிரேயுள்ள ரூஷியகாட்சிமண்டபத்தை ஏற்கனவே அநேககுருமாரும், கன்னியாஸ்திரீமாரும் தரிசித்திருக்கின்றார்கள். லெனினுடையவும், மற்றும்ரூஷியதலைவர்களுடையவும் எண்ணிறந்த பிரதிரூபங்கள்மத்தியில் சதாசகாயமாதாவை வர்ணிக்கும் அநேகபழைய காலப்படங்களுமிருக்க அவர்கள்கண்டார்கள்.

● அமெரிக்கஅரசு மீண்டும்அணுக்குண்டுப் பரீட்சைகளை நடத்தத்தொடங்கியிருக்கிறது. சென்றமாதம் 28-ந் திகதியன்று அது பசிபிக்சமுத்திரத்திலுள்ள என்விடாக்எனுமிடத்தில் முதலாவதுகுண்டைப் பரீட்சித்துள்ளது. அமெரிக்கவரசு தற்போது தொடர்பாக நடத்ததொடங்கியுள்ள அணுக்குண்டுப்பரீட்சையில் 30 குண்டுகள் பரீட்சிக்கப்படவிருக்கின்றன. சுத்தமான அணுக்குண்டுகளைப் பரீட்சிப்பதே இதன்நோக்கமாகும்.

● இம்மாதம் 16-ந் திகதியன்று நடைபெறவிருக்கும் கோளசட்டசபை இடைத்தேர்தலில்—அதாவது, தேவிகுளம் இடைத்தேர்தலில் கம்யூனிஸ்த கட்சி தோல்வியடைவது எல்லாச்சனநாயகக்கட்சிகளுக்கும் நலமாயிருக்கும். ஆதலால் தனித்தனியேநின்று பலங்குன்றிப்போகாது பி. கே. நாயர்என்ற காங்கிரஸ்கட்சி அபேட்சகரையே ஆதரித்துவாக்களிப்பதென்று மக்கள்சோஷலிஸ்தகட்சியும், முஸ்லீம் லீக்கும் முடிவுசெய்திருக்கின்றன.



மேற்றிராணித்துவ அபிஷேக
## 9-வது ஆண்டு நிறைவு

மகாவந். நம்மேற்றிராணியாண்டவர்அவர்கள் மேற்றிராணித்துவஅபிஷேகம் செய்யப்பெற்ற ஒன்பதாவதுஆண்டு நிறைவுதினம் நிகழும் வைகாசிமாதம் 22-ந் திகதியாகிய வருகிறவியாழக்கிழமை வருகின்றது. இச்சுபசந்தர்ப்பத்திலே ஆண்டகை அவர்கள்மேலும், அவர் மூலமாக யாழ்ப்பாண மேற்றிராசனத்தின் மேலும் பொழியப்பெற்றுள்ள சகல ஆசீர்வாதங்களுக்குமாகச் சர்வேசுரனுக்கு நன்றியறிந்ததோத்திரம் செலுத்துவதில் அவரின்ஞானமக்களாகிய நாம்அனைவரும் அவருடன் ஒன்றுசேர்வோமாக!

நிற்க, நமது ஆண்டகைஅவர்களின் உள்ளத்தை இன்று ஓர்புதியஇயக்கம் முக்கியமாக ஈர்த்துகொண்டிருக்கின்றது. அஃதாவது, திருத்தொண்டிற்குத் தங்களைமுற்றாக அர்ப்பணிப்போரின் சபைஒன்றை எமதுமேற்றிராசனத்தில் ஸ்தாபிப்பதேயாகும். இந்தச்சபையின் நோக்கம், குருமார், சந்நியாசர்களைப் பயிற்றுவது அன்று. ஆனல், விசுவாசத்தைப் பரப்புவதும், நம்தேசத்தவர்களின் கிறீஸ்துவசீவியத்தை வளர்ப்பதுமாகிய இரண்டையும் தங்கள் வாழ்க்கையின் இலட்சியங்களாகக் கொண்டு தொண்டாற்றமுன்வருகிற ஆடவரும், பெண் மணிகளுமாகிய சாதாரணகிறீஸ்துவர்கள் இருபாலாரையும் பயிற்றுவதே இச்சபையின் நோக்கமாகும்.

தங்கள் சீவியத்தைச் சர்வேசுரனுடையவேலைக்கு அர்ப்பணஞ்செய்து, அதற்காகவே சீவிக்கும் ஆத்தும இரட்சணிய வாஞ்சையுள்ள ஆடவரும், பெண்மணிகளுமாகிய சாதாரணகிறீஸ்துவர்கள் தமதுமேற்றிராசனத்துக்கு அதிகம் தேவைப்படுகின்றனரென்று ஆண்டகைஅவர்கள் உணருகின்றார். அதனல் அவர் இத்தகைய விசேஷதொண்டிற்குத் தகுந்தஅழைத்தல்களை ஆதரித்து வளர்க்கும்படி அனைவரையும் அருட்டித்தூண்டிவிட ஆசிக்கின்றார். விசேஷமாக, தமதுகல்லூரிகளிலும், கலாசாலைகளிலும் கடமையாற்றுகின்ற ஆசிரியர்கள் இந்தஅழைத்தல்களை அருட்டித்தூண்டிவரவேண்டுமெனக் கேட்கின்றார். மக்களைக் கிறீஸ்துநாதர்பக்கமாகத் திருப்பக்கூடிய ஓர்திருத்தொண்டர்படையை இளம்வாலிபர், கன்னியர்கள்மத்தியிலே கண்டுகொள்ளத்தக்கதாய்த் தேவனும், அவர் திருத்தாயாரான பரிசுத்தலூர்துநாயகியும் அருள்பாலிக்குமாறு நமது செபங்களிலும், தானதருமங்களிலும் விசேஷவிதமாய் நினைவுகூர்ந்துமன்றுடி ஆண்டகைஅவர்களின்கருத்து நிறைவேற ஆனதுணைசெய்வோமாக!

---

நன்மை எவ்வளவு நிறைவானதென்றல், நாம் என்றுமே நன் கூறிக்கொண்டிருக்கவேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அயினுஸும் அலிஜாவும்

"நீயா? கோலக்கலாபச் சாயலும், குளிர்ந்தசந்திரனின் ஒளிமுகமும், நீலக்கடலின் முத்துப்பற்களும், நெஞ்சையள்ளும் யாழ்குரலும், மலையருவியின் சிரிப்பொலியும் எங்கு ஓடியொளிந்து உன்னை வஞ்சித்துவிட்டன அலிஜா! உன் காவியமேனி இனி விகாரமாய் உதிரும் மலர்இதழைப்போல விரல்களும், சதைகளும் சிதைந்து உதிரவேண்டியதுதானா?" என்றான் அயினுஸ்.

"கண்ணைப்பறிக்கும் கறுப்புச் சலவைக்கல்மாளிகையிலே கற்பகப்பெட்டகமாய் வாழ்ந்த நீ இன்று கற்குகையில் கண்ணீரும், கம்பலையுமாய் அபலையாகச் சஞ்சலப்படுகிறாயே. என்இதயப்புறா இப்படிச் சீரழிவதைக்காண என்இதயமே இருகூறாகப் பிளந்து தவிக்கிறதே அலிஜா!" என்று பின்னும் கூறினன்.

அவள் பதில்பேசாமல் குனிந்துநின்றாள். அவள்இதயம் பொங்குங்கடலாகக்குமுறிக் கண்ணீராக அவள்கண்களில்வழிந்தொழுகி அந்தக்கற்பூமியை நனைத்தது. ஹின்னோன் பள்ளத்தாக்குமுழுவதும் அயினுஸின் கதறலும், அலிஜாவின் புலம்பலும் எதிரொலித்தன.

அயினுஸால் மனதைக்கட்டுப்படுத்த முடியவில்லை. தன் காதல்சிலையைத் தழுவத் தாவியும்விட்டான். அலிஜா பதறி அப்பால்நகர்ந்து தவித்தாள். கண்டாலே குடலைப்பிய்க்கும் குஷ்டரோகத்தையும்கருதாது தாவித்தழுவ அன்பு வென்றுவிட்டது. ஆனல், யூதசட்டம் நம்மைத் தடுத்துநிறுத்தி நமதுஅன்பிற்கு வேலிபோட்டுவிட்டது. சரீரத்தால் நாம் பிரிக்கப்பட்டுவிட்டோம். சட்டப்படி குஷ்டரோகிகள் ஊருக்குவெளியே வசிக்கவேண்டுமாம். யாரும் அணுகவேமாட்டார்களாம். அப்படி யாராவதுசமீபத்தில் வருவது தெரிந்தால் குஷ்டரோகிகள் தலைப்பாகையை நீக்கிவிட்டுக் கையை வாய்க்குமுன் வைத்துக்கொண்டு "அசுத்தம், அசுத்தம்" என்று கத்தவேண்டுமாம்.

"ஆம். இந்த இடத்தைவிட்டுப் போய்விடுங்கள்; என்னை இனிமறந்தேவிடுங்கள்!" அவள்குரல் கரகரத்தது. அழாதுஅழுதாள். அயினுஸின் மார்பு பொங்கும்அலைபோல் நிமிர்ந்துதாழ்ந்தது. அப்போது அலிஜாவின் கழுத்தோரத்திலுள்ள சிறுவட்டவடிவமான புண்ணிலிருந்து இரத்தம் கசிந்தது. அந்த இரத்தக்கசிவைத் துடைக்கத் தன் கழுத்தைச் சுற்றியிருந்த நீண்ட பழந்துணியை அவிழ்த்து அவள்முன் போட்டான் அயினுஸ். தன் நினைவுப் பொருளாகத்தான் அந்தப் பழந்துணியை அயினுஸ் கொடுக்கிறானென்று நினைத்து அதைத் தன்கண்களில் ஒத்திக்கொண்டாள் அலிஜா.

அயினுஸ் சிறிதுவேளை மௌனமாகவேஇருந்தான். திடீரென்று தனது குதிரையின் கனைப்புச்சப்தம் கேட்டதும் ஏதோயோசனை செய்தவன்போல நிமிர்ந்து, "அலிஜா! நான்வருகிறேன்" என்று கூறிவிட்டு அவளைத் திரும்பித்தானும்பாராது மனதைப் பலவந்தமாகக் கட்டுப்படுத்திக்கொண்டு குதிரைமேல்அமர்ந்து அதைத் தட்டிவிட்டான்.

தங்கக்கிரணங்களை வாரியிறைத்து மலைவாயிலில் குதித்துக்கொண்டிருக்கும் மாலைக்கதிரவனின் ஒளியில் அயினுஸின்உருவம் தூரமறைவதைப் பார்த்தபடியே அழுதவண்ணம் நின்றாள் அலிஜா.

பெத்பாஜ்மலைச்சாரல் குகைஒன்றில் மாளிகைப்பேரழகி அலிஜா மனிதசமூகம் விரட்டியடிக்கும் தொழுநோய்ப் …ண்டமாகக்கிடந்தாள். அவள்வாழ்ந்த …ன்எழிலும், சலவைக்கற்களால் கட்…ட்ட கோபுரங்களும், தங்கத்தகடுகளால் வேய்ந்த கோபுரமகுடங்களும் காலையிலும், மாலையிலும் பரிதியின் பொற்பூச்சால் செகசோதியாய் மின்னுவதைப்பார்த்துப்பார்த்துக் கண்ணீர் உகுத்துப் பூத்துப்போய்க்கொண்டேயிருந்தன அலிஜாவின் பளிங்குவிழிகள். பருவம்துடிக்கும் பருவத்தில் பாசிபிடித்த பிணமாகத்தான் யூதகுலத்தால் கற்குகைஒன்றில் வாழ அவள் விரட்டப்பட்டாள். அவளின் அழகுதான் அழுகிக்கொண்டிருந்தது. ஆனல், அவளின்இளம்உள்ளம் அழுகாமல் இருந்தது.

* * *

"அலிஜாவை உங்களுக்குத் தெரியுமா?"

"அவளைத் தெரியாத கன்னிகைகள் யூதகுலத்தில்இருக்கமுடியுமா? அவள் பேரழகி. கீதக்குயில். அறிவின் தீபம்."

"அயினுஸைத் தெரியுமா?"

"அயினுஸா? ரோமைச் சக்கிரவர்த்தியின் பேரவையிலே விருதுகள் பலபெற்ற வீரபரம்பரையில் உதித்த வீரனல்லவா அவன். அவனை அறியாத ஆடவர்கள் உண்டா? ஆண்மையும், அறிவும், அன்பும் ஒருங்கேஉருக்கொண்ட புசபலபராக்கிரம வீராதி வீரனல்லவா அவன்!"

பரிசேயரின் வம்சத்தைச் சேர்ந்தவள் அலிஜா.

சதுசேயர் வம்சத்தைச்சேர்ந்தவன் அயினுஸ்.

பிற மதசாரக்கலப்பை எதிர்த்து மக்கபெயர்காலத்தில் ஏற்பட்ட கிளர்ச்சியினல் விளைந்த மூன்றுகட்சிகளில் முதல் இருகட்சியினர்களையும் சேர்ந்தவர்கள் பரிசேயரும், சதுசேயரும். இருபிரிவினரும் நேர்மாறான கருத்துடையவர்கள் இணைய முடியாத இருதுருவங்கள்.

பரிசேயர் வைதீகப்பித்தும், அகங்காரமும், பிறரைஇகழ்வதில் இன்பமும், பெரியஞானிகளைப்போல் பசட்டு அடிக்குங்குணமும் உள்ளவர்கள். வேதாகமசட்டங்களை அட்சரம்பிசகாமல் அனுசரிப்பது அவர்களின்நோக்கம்.

சதுசேயரோ யூதர்களில் மிகுந்த பணமும், அதிகாரமும்கொண்டவர்கள். அரசாங்கபீடங்களில் நல்லபதவிகளை வகிப்பவர்கள். பரிசேயருக்குமாறான கொள்கையுடையவர்கள். நுணுநுணுக்கமாக வேதானுசாரங்களைக் கற்றுத்தேர்ந்தவர்கள். வெளி ஆசாரங்களில் நம்பிக்கைவையாது சன்மார்க்கநடத்தையே சகலத்திலும் சிறந்தது என்ற கொள்கையுடையவர்கள்.

* * *

மனோகரமான மாலைநேரம். மலர் மணத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தது தென்றல். கிணற்றடியில்அமர்ந்து அழகாக ஏதோஒருபாட்டைப் பாடிக்கொண்டிருந்தாள் அலிஜா. எதிர்பாராதவிதமாய்க் குதிரைமீதுஅமர்ந்து அந்தப் பூங்காவைக் கடந்துகொண்டிருந்த அயினுஸின்செவியிலே அலிஜாவின் இன்பகீதம் தேன்பாய்ச்சியது.

இசையில் கட்டுண்ட நாகம்போல் அலிஜாவின் கீதகானத்தில் மயங்கிய அயினுஸ் குதிரையைநிறுத்தினன். கீழ்இறங்கினன். கானம்வந்த திசையைநோக்கிச் சென்றான். அழகி அலிஜாவின் உருவம் அவனை வசீகரித்தது. அரவம்கேட்டுத் திரும்பிய அலிஜாவும் அயினுஸின் அழகில்மயங்கி எழுந்தோடாது அசையாமலே நின்றாள்.

முதல் சந்திப்பிலேயே ஒருவரையொருவர் அறிமுகப்படுத்திக் கொண்டனர் இருவரும். அவர்களின் மறுசந்திப்புகள் இரண்டொருமுறைதான். சமூகப்பிளவுகள் அவர்களின் மணவாழ்க்கைக்கு இடங்கொடுக்கவில்லையாயினும் மணந்தால் இருவரும், இல்லையேல் மரணமட்டும் மணமில்லாமலே வாழ்வோம் என்று சபதம்செய்துகொண்டனர் தங்களுள்.

அலிஜா கிறீஸ்துநாதரைப்பற்றிக் கேள்விப்பட்டிருந்தாள். ஆனல், அவரை நேரில்பார்த்தது கிடையாது. அவள்தந்தை சக்கேயு ஆஸ்திக்காரனயிருந்தாலும் எல்லோருடனும் அன்பாகப் புழங்கக்கூடியவன். அவனைப் பற்றிய விபரம்அறிந்த கிறீஸ்துநாதரும் பலரின்பயமுறுத்தலுக்கு அஞ்சாது அவன்வீட்டிற்குச் சென்றார். "இன்றைக்கு இந்தவீட்டிற்கு இரட்சணியமுண்டாயிற்று; ஏனெனில், இவனும் அபிரகாமுக்குப் புத்திரனயிருக்கிறான்" என்றுகூறிச் சக்கேயுவின்வீட்டிலே விருந்தருந்தி அவன்மனதைக் கவர்ந்தார். இங்குதான் கிறீஸ்துபிரான் "ஆஸ்திக்காரன் தேவனின்இராச்சியத்தில் பிரவேசிப்பதைவிட ஊசித்துவாரத்தின்வழியாய் ஒட்டகம் நுழைவது வெகுஎளிது" என்று ஆஸ்திக்காரருக்குச் சூடுகொடுத்தார். பலநாள் கேள்விப்பட்டிருந்த கிறீஸ்துபிரான்தன் வீட்டிலேயே விருந்தருந்துவதைப் பார்க்கவும், அவரது பொன்மொழிகளைக் கேட்கவும் பாக்கியம் கிடைத்ததேயென்று மனம்பூரித்தாள் அலிஜா.

* * *

பலமாதங்கள் ஓடின. அலிஜாவும், அயினுஸும் சந்திக்கவேயில்லை.

யூதர்களாலே அடிபட்டுச் சிலுவையில் கிறீஸ்துபிரான் அறையப்படும் செய்தியைக் கேட்டஅலிஜா துக்கித்து அழுதாள். தனதுஅயினுஸ் அருகிலிருந்தால் அவரைமன்றாடி அந்தக் கொடியவர்களைக் கொன்றுகுவித்து மீட்பரை மீட்கலாமே; இந்தவேளை அவரைச் சந்திக்க முடியவில்லையே என்று தனிமையாகத் தன்வீட்டின் மேற்தளத்திலிருந்து ஆகாயத்தையும், நகரத்தையும், நடந்துசெல்லும் மக்களையும்பார்த்துக் கண்ணீர்விட்டு அழுதாள்அலிஜா. ஆனல், அயினுசோ மேலதிகாரிகளின் உத்தரவுப்படி கிறீஸ்துபிரானை உபத்திரவப்படுத்தும் வீரர்களில் ஒருவனுகிக் கவசமணிந்து இடையில்வாளும், ஒருகரத்தில் ஈட்டியும், மறுகரததில் சாட்டையுமாகத் தனது வீரர்கள்சகிதமாய்ச் சிலுவை சுமக்கும் கிறீஸ்துநாதருடன் கல்வாரி மலைக்குப் போய்க்கொண்டிருந்தான். அயினுஸ் கிறீஸ்துநாதரின் போதனைகளைக் கேட்டும், அவரது புதுமைகளைக் கண்டும் அவர்மீது அதிகபக்தி வைத்திருந்தான். ஆயினும், அவன் அரசாங்க ஊழியன். சட்டத்திற்குத் தலைவணங்க வேண்டியவன்அல்லவா?

அலிஜா சோகத்தால் சிறிதுகாலம் அயினுஸை மறந்துவிட்டாள். அயினுஸும் அரசாங்க அலுவல் காரணமாகத் திபேரியாக்கடலின் வடகிழக்கிலுள்ள பெத்சாயிதாநகருக்கு அனுப்பப்பட்டான். ஓர்ஆண்டு ஓடிமறைந்தது.

* * *

திடீரெனத் திடுக்கிடும்வகையிலே அழகிஅலிஜாவின் முகமெல்லாம், உடம்பெல்லாம் குஷ்டரோகதடங்கள் பூத்துவளர்ந்தன. அவளின் அழகு மேனி அவலட்சணமேனியாகிச் சிதையஆரம்பித்தது. அவள்தந்தை சக்கேயு தனதுஒரேமகளின் நிலையைக் காணச் சகியாது வருந்திஅழுதான். தான்கட்டிய எதிர்காலக் கோட்டைகள் நொறுங்கிப்போயினவே என்று உள்ளம் மடிந்தான். யூதசட்டத்திற்குப்பயந்து ஊரின்கோடியிலுள்ள சனசந்தடியற்ற பெத்பாஜ் மலைச்சாரலின் குகைஒன்றில் அலிஜாவைக் கொண்டுபோய் வசிக்கச்செய்து சாப்பாடு கொடுத்துவந்தான். அலிஜாவின் உடலைப்போல் அவள்உள்ளமும் புண்பட்டுத் துடித்தது. எனதுநேசன் அயினுஸை இனிஉள்ளநாள்வரை அடையமுடியாதே; எனது நிலைகண்டு என் அன்பரின் மனம் எவ்விதம் ஏங்கிமடியுமோ? என்று இரவுபகல் கலங்கியபடியே கற்குகையில்கிடந்தாள் அலிஜா.

போனஅலுவல் முடிந்து திரும்பிய அயினுஸ் தன்காதலியைக் கண்டுகளித்துப் பிரிவின்வேதனையை ஆற்றவேண்டும்; எந்தவிதமும் இந்த ஆண்டிலே திருமணஞ் செய்தாக வேண்டுமென்ற ஆர்வத்துடன் ஓடோடியும் வந்தான். ஆனல், அவன் தன்சொந்தஊரில் கால் வைத்ததும் அலிஜாவைப்பற்றிக் கேள்விப்பட்டதே பதைத்துப்போனன். எல்லாம் அவனுக்குக் கனவாகவேபட்டது. எதையுமே நம்பாமல் பைத்தியம் பிடித்தவன்போல் தெருவெல்லாம் அலைந்து இறுதியில் பெத்பாஜ் மலைச்சாரலை அடைந்தான். அன்பன் அயினுஸின் அலறலைக்கேட்ட அலிஜா துடித்தெழுந்து குகையைவிட்டு 'அயினுஸ்' என்று அலறிக்கொண்டு ஓடிவந்தாள்.

மனமுடைந்த அயினுஸ் தனது தோட்டத்திலே ஓரிடத்தில் அமர்ந்து "இனி வாழ்வதில் பயனில்லை; அலிஜாவின்உடல் அங்கு அழுகுகிறது; அயினுஸின்உள்ளம் இங்கு புழுங்குகிறது; இனிச் சித்திரவதையோடு வாழ்வதைக்காட்டிலும் இறப்பதே மேல்" என்று புலம்பிச் சாகவும் துணிந்துவிட்டான். அப்பொழுதுதான் ஒரு கீதகுரல் பின்புறம் காற்றிலே மிதந்து வந்தது. திடுக்கிட்டுத் திரும்பினன். பாடியபடி அலிஜாவின்பொன்னுருவம் தூரத்திலிருந்து அவனைநோக்கி வந்துகொண்டிருந்தது. அவன் தன்கண்களையே நம்பமுடியவில்லை. பலமுறை கண்களைக் கசக்கிப்பார்த்தான். இவளேஅலிஜா!

"அலிஜா!" என்று அவள்பக்கம் ஓடினன். அவளும் "அயினுஸ்" என்று ஆனந்தத்துடன் ஓடிவந்தாள். அலிஜா பொற்தகடுபோல் முன்போலவே அழகுபொலிந்துநின்றாள். குஷ்டரோகதடங்கள் ஒன்றுதானும் அவள் மேனியில் காணப்படவில்லை. உணர்ச்சியுடன் அவளை வாரியணைத்துக்கொண்டான்அயினுஸ். அவளும் சிறுகுழந்தையைப்போல அவன் கரத்தைப் பிடித்து நெடுநேரம் அழுதாள்.

அலிஜாவின் உடல் குணம்பெற்ற விபரம் புரியாமல் எல்லாருமே திகைத்தனர். அலிஜாவைக் கேட்டனர். அவள் தனக்கும் ஆச்சரியமாயிருப்பதாகச் சொன்னள். அயினுஸையும் கேட்டனர். அவனும் "புதிராக இருக்கிறது; எதுபோனலும் என் அலிஜா என்சொத்துமீண்டது" என்று புன்னகையுடன் பதிலளித்தான்.

எல்லோரதும் நீடிய விசாரணைக்கும் பின் அயினுஸ் தன்கழுத்தைச் சுற்றியிருந்த துணியை எடுத்து அலிஜாவிடம் விட்டெறிந்ததையும், அவள் அதை எடுத்துத் தன்கழுத்தில் சுற்றிக்கொண்டதையும் கேட்டறிந்ததிலிருந்து அந்தத்துணியில்தான் ஏதோ ஒரு மகத்துவம் இருக்கிறதென்ற முடிவுக்கு எல்லோருமவந்தனர். கபாலஸ்தலத்தில் கிறீஸ்துநாதரைச் சிலுவையில் அறையும்போது அவரது வஸ்திரங்களை நாங்கள் பங்குபோட்டோம்; எனக்குக்கிடைத்த பகுதியே அந்தத் துணி என்றான் அயினுஸ். அதன்பின்தான் எல்லோரது கண்களும்திறந்தன. நிகழ்ந்த புதுமையைத் திக்கெட்டும் பறைசாற்றினர். அந்தத்துணியுடன் மற்றப்பகுதிகளையும் சேர்த்துப் பூசிதமாகக் காப்பாற்ற முடிவுசெய்தனர். ஞானஸ்நானம்பெற்றுக் கிறீஸ்துவர்களாக மாறினர் இளங்காதலர்கள் அயினுஸும், அலிஜாவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழுகை! அழுகை!

இப்போதெல்லாம் எல்லாரும் எல்லாரையும்பார்த்து அழுகிறார்கள். இன்னார்தான் அழவேண்டுமென்ற கட்டுப்பாடோ, நியதியோ உலகில் இல்லாமல்போய்விட்டது. இதை நினைத்தால் நமக்கே அழுகைவரும் போலிருக்கிறது.

நல்லவனும் அழுகிறான், "ஐயோ! உலகம் கெட்டுப்போயிற்றே என்று. அதேநேரத்தில் கெட்டவனும் அழுகிறான், இப்படி ஒன்றிரண்டுநல்லவன்கள் இருப்பதால்அல்லவா நமக்குக் கெட்டபெயர்என்று."

முதலாளி தொழிலாளியைப் பார்த்து அழுகிறான். "என்உப்பைத் தின்றுவிட்டு எனக்கே துரோகம்செய்தானே" என்று. இந்தஇடத்திலே உப்புமுதலாளியிடம் வேலைபார்ப்பவன்தான் உப்பைத்தின்றுவிட்டுத் துரோகம்செய்கிறான். அப்படியானால் சிமெந்து, விறகு, அடுப்புக்கரி. பேப்பர்முதலிய தொழில்நடத்தும் முதலாளியின் தொழிலாளி எதைத்தின்று துரோகம்செய்வான்என்ற சிறுசந்தேகம் எழுகிறதல்லவா?

மனிதவாழ்க்கையில் ஒரேயொரு நேரத்தில்தான் அழுகை வரவேற்கப்படுகிறது. பிறக்கும்குழந்தை நைந்துபோன தக்காளிப்பழம் மாதிரியான தன்வாயைக் கோணிக்குறுக்கிக் 'ச்வா ச்வா' என்று அழுதால்தான் சுற்றியிருப்பவர்கள் 'அப்பாடா' என்றுதிருப்தியாகப் பெருமூச்சு விடுவார்கள். குழந்தை பிறக்கும்போது வாயைத் திறந்து அழாமல்பிறந்ததோ மற்றவர்கள் 'ஆ, ஓ' என்று அழ ஆரம்பித்துவிடுவார்கள்.

ஆக, பிறக்கும்போதே அழுது தொலைக்கும் அழுமூஞ்சிக் குழந்தைதான் உயிருள்ள குழந்தையென்று நம்பப்படுகிறது. இப்படிப் பிறப்பின்போது வரவேற்கப்படும்அழுகை அப்புறம் வாழ்க்கைமுழுவதும் வெறுக்கப்படுவது ஏனோ?

மனிதவாழ்க்கையில் இன்னொரு விசித்திரம். பிறக்கும்போதுபிறப்பவன் (ள்) அழுகிறான் (ள்). ஆனால், அதே ஆண் அல்லதுபெண் வளர்ந்து இறக்கும்போதோ, மற்றவர்கள்தான் அழுதுதொலைகிறார்கள்.

இறந்தவீட்டின்அழுகை ஒருகதம்பம்—'மிக்சர்' மாதிரி. 'கர்'என்று எருமைக்குரலில் ஒருசத்தம். 'நொய்' என்று கொசுக்குரலில் ஒருசத்தம். 'கீச்பூச்'என்று நாய்க்குட்டிக்குரலில் ஒருசத்தம். காட்டிலுள்ள எல்லாமிருகங்களும்சேர்ந்து கத்துவதைப்போல் இப்படி எல்லாச்சத்தங்களும் கலந்து எழும் ஒப்பாரிஓலத்தைக்கேட்க இந்த மனிதக்காதுகளுக்குச் சக்தியில்லை. அதனால்தான் ஒப்பாரியைக்கேட்கும்போது காதுஇரண்டையும் இறுகப் பொத்திக்கொள்ளுகிறோம்.

சாவீட்டு அழுகையில் நாம் காதைமூடிக்கொண்டாலும், கண்ணால் பார்த்து ரசிக்கத்தகுந்த சிறந்தஅம்சங்கள் சிலஉண்டு. வந்துஅழும்பெண்கள் பொதுப்பட அங்கு இறந்தவரை நினைத்து அழுவதில்லை. தங்கள்தங்கள் வீட்டில் எப்போதோ செத்துத் தொலைந்த கணவன், அண்ணன், தம்பி, அக்காள், தங்கை அல்லதுசுற்றத்தார்களைநினைத்து அவர்கள்பேரைச் சொல்லித்தான் அழுவார்கள். இழவுவீட்டில் கூட்டமாக ஒப்பாரிவைக்கும் மாதர்கள் ஒருவர்முகத்தை ஒருவர்பார்த்துக் கொள்ளமாட்டார்கள். தலைமயிரை அவிழ்த்துவிட்டுக்கொண்டு, தலையையும் கவிழ்ந்துகொண்டு அழும்காட்சியிருக்கிறதே...ஏன் இப்படிக் குனிந்து கொள்ளுகிறார்கள் தெரியுமா? இந்தக் கூட்டமகாநாட்டு அழுகையில் 'மஜோறிற்றி' பெண்களுக்குக் கண்ணீரே வராது. சத்தம்மட்டும் வீடேகிடுகிடுக்கும்.

ஒப்பாரிஅழுகையில் சுகமான அழுகையும் உண்டு. அதாவது வீட்டுச் சுவரில் சோபாமாதிரிச் சாய்ந்துகொண்டு, சைக்கிள்ரையர் வளைந்தமாதிரி வாயையும்வளைத்துக்கொண்டு, சுட்ஸ்லண்டி என்ஜினைப்போல் கூக்குரலிடுபவர்களைக்காணச் செத்துப்போன பிணமே எழுந்துவந்தாலும் ஆச்சரியமில்லை.

என்ன, அழுகையில் ஒரேயடியாகப் பெண்களைப்பற்றிமட்டும் குறைகூறுகிறீர்கள். ஆண்கள் அழுவதில்லையா என்று மேரியும்லட்சுமியும்... (அதாவது பெண்கள்) கூக்குரலிட்டு அழுவது கேட்கிறது. அவர்களுக்குநான்கூறும் பதில்: 'ஆண்களும் அழுகிறார்கள். ஆனால், அழுவதற்கென்றே லைசென்ஸ் வாங்கியவர்கள் பெண்கள்' என்பதுதான்

உலகம்படைக்கப்பட்ட காலத்திலிருந்து பிறக்கும்போதே அழாதமனிதசீவன் ஒன்றேயொன்றுதான் உண்டு. அதுவும் ஆதாம்என்ற ஆண்மகன்தான். அவன் அழவில்லை. ஏனெனில், அவனுக்குமுன்னால் பெண் இல்லை. ஆகவே, அவன் பிறக்கவில்லை. படைக்கப்பட்டான். பிறகு ஏவாள்என்ற பெண்வந்தாள். உலகில்அழுகைக்கு ஆரம்பவிழாநடத்தியவள் அவள்தான். வாழ்க, அவள்தொடக்கிவைத்த அழுகையும், கண்ணீரும், வாழ்க! ஏனெனில், அந்தஅழுகையால் அல்லவா பெண்களுக்குக் காது, கழுத்து, கைகளில் நகையும், துணிகளும், மணிகளும் அவ்வப்போது கிடைக்கின்றன.

அழுகையில் அடம்பிடித்துஅழுவது ஒருவகை. அதாவது விடாதுபெய்வதை அடைமழை என்பதைப்போல விடாதஅழுகைதான் அடம்பிடித்த அழுகை. 'அப்பா, நான்உடைத்த சிப்பியில் முத்தேஇல்லைஎன்று அழுகிறாள்சிறுமி. இதற்கு 'அப்பா' என்ன செய்யமுடியும்? முத்துக்கொடுக்கமுடியுமா? முத்துக்குப்பதில் முதுகில்நாலு மொத்துவைக்கிறார். சிறுகதையாக ஆரம்பித்தஅழுகை தொடர்கதையாக நீளுகிறது.

அழுகையைச் சத்தம், வாயின் நெளிவு, சுளிவுகளைக்கொண்டு பல வகையாகப்பிரிக்கலாம். சிலபேர்அழுதால் சிரிப்பதுபோல் இருக்கும். சிரித்தால் அழுவதுபோல்இருக்கும். வாயாகப்பட்டது வளையத்தெரியாமல் வளைந்து, நெளியத்தெரியாமல் நெளிவதால் ஏற்படும்வேடிக்கைஇது. சிலர் அழும்போது உடல்முழுவதும் சன்னிவந்ததைப்போல் குலுங்கும். முக்கியமாகக் கனமான உடல்காரர்களுக்கு. சிலர் விக்கிவிக்கிஅழுவார்கள். சிலர் கேவிக்கேவிஅழுவார்கள். இன்னுஞ் சிலர் தேம்பித்தேம்பி அழுவார்கள். இன்னுஞ்சிலர் பேசுவது அழுவதைப் போலவே இருக்கும். அவர்கள்பாடினாலோ கேட்கவேண்டியதேயில்லை. சிலதாய்மார் குழந்தையைத் தொட்டிலில்இட்டு 'ரோ ரோ...'என்று கதற ஆரம்பித்துவிட்டால், என்னவோ ஏதோஎன்று அக்கம்பக்கத்தில் உள்ளவர்கள்எல்லாம் ஓடிவருவார்கள். தூங்கவைத்த குழந்தையோ தாயின் 'ரோ ரோ' முகாரிப் பல்லவிக்கு 'ஆவ் ஆவ்' என்று அநுபல்லவியாக அழும்.

சிலவீடுகளிலே தாம்பத்யச் சண்டைகளில் கணவன் தன்தலையைச் சொறியக் கையைத்தூக்கினாலே போதும். கோடைஇடிக் குமுறலைப்போல் 'ஐயோ' என்னைக்கொன்றுட்டானே, கொன்றுட்டானே என்று அழுகைக்கேட்கும். ஒருமைலுக்கு அப்பால்நிற்கும் பொலிஸ்காரன் தடியைவீசிக்கொண்டு ஓடிவந்தாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாசாங்குஅழுகைஎன்று ஒருவகை. வீட்டில்திருடிய காலணாவுக்கும்சரி, பாடசாலையில் [illegible] சரி, பெரியவர்கள் [illegible]னரே சிறுவர், சிறுமிகள் ஏதோபெரிய மனஸ்தாபப்படுபவர்களைப்போல் அழத் தொடங்கிவிடுவார்கள். நடிப்புஅழுகையும் பாசாங்குஅழுகையைச் சேர்ந்ததுதான். சினிமாவில்வரும் அழுகை நடிப்பைக்கண்டு உண்மையாகவே அழுதுகொண்டே [illegible]டிக்கும் ரசிகசிகாமணிகளைக் கண்டதில்லையோ?

# கண்டேன்

**தேவதாயின் மாதமான இம் மேமாதத்தில் "தேவ அன்னையைக் கண்டேன்" என்று புலவர் மனம் உருகிப் பாடுவது நாமும் பாடிப்பாடி அனுபவிக்கத் தக்கது.**

என்னிலும் எனக்கினி யார்தான்
இன்னில மீதினில் இல்லை
என்னிலும் எனக்கினி யாளோர் — தெய்வ
கன்னி யிருப்பது கண்டேன்

மஞ்சில் மறைந்தொளிர் மதிபோல்
நெஞ்சில் எனக்கருள் தந்து
பிஞ்சி லிருந்தெனைக் காக்கும் — ஒரு
வஞ்சி யிருப்பது கண்டேன்

கண்ணை மறைத்திடும் உலகம்
தன்னையே நம்பிக் கெடாமல்
என்னைத் தடுத்தருள் புரியும் — மரி
அன்னை யிருப்பது கண்டேன்

இத்தனை நாளவள் தயவை
முற்றிலு மேயறி யாத
பித்தனைப் போலுயிர் வாழ்ந்த — பெரும்
பேதையா னென்பதும் கண்டேன்

கருணைப் பெருக்கினைக் கண்டேன்
கனியு முளம்கண்டு கொண்டேன்
மரணத் துயரையும் வெல்ல — வல்ல
மருந்தினை யான்கண்டு கொண்டேன்.

— "மாதாவின் புலவன்"

# இதய கீதம்

பெற்றோர் சிறியவரிடம் அதிகமாகச் சினந்துகொள்வதும், அவர்களைச் சிரத்தையுடன் கண்காணிப்பதும், வாலிபராகிவிட்டால் அதிகமாக அதட்டமுடியாமல் போய்விடுவதும் இயல்புதானே. அதனால் கலையார்வனை, அறிவழகனின் தமையனை, மலர்விழியின் அன்புஅண்ணனை எவரும்எழுப்பும்படி தொல்லைகொடுக்கவில்லை.

அவன் தூக்கம்கலைந்து எழுந்தபோது, அவன் தங்கை மலர்விழி சீவிமுடித்தகூந்தலோடும், சிரித்தமுகத்தோடும் விளங்கினாள். அவள் கூந்தலில் குடியிருந்த மல்லிகையின்மணம் மதுரமாயிருந்தது.

"போய்க் குளித்துவிட்டு வாருங்கள், சமையலெல்லாம் சித்தமாகிவிட்டது; உங்களுக்குத்தான் கடவுள், கோவில் இவையெல்லாம் அவசியமே இல்லையே" என்றாள் மலர்விழி.

"அறியாத ஒருபொருளைப்பற்றி அனாவசியமாக நேரத்தைச் செலவழிக்கவேண்டுமா? நமதுகண்களுக்குத் தெரியாதஎதையோ கற்பனைசெய்துகொண்டு, அதற்காகக் கவலைப்படுவது கண்மூடித்தனமல்லவா?" என்று குதர்க்கம்பேசினான் கலையார்வன்.

"உங்களால் பார்க்கமுடியாது, அண்ணா; உங்களுக்குக் கண்ணில்லை. ஆனால், நான்காண்கின்றேன். அதனால், பூரிப்போடு பூசிக்கிறேன்."

"அதுபோகட்டும். மல்லிகை நல்ல மணமாக இருக்கின்றது. இல்லையா? நமதுதோட்டத்து மலர்தானே?"

"ஆமாம், அண்ணா, ஆனால், எனக்கு ஒருசந்தேகம். மலரில் இருக்கும் மணத்தைத் தாங்கள் எப்படிஅறிந்தீர்கள்?"

"வேடிக்கையானகேள்வி. எப்படியா அறிந்தேன்? அதன்மணத்தை என் மூக்கினால்நுகர்ந்தேன். அதனால்அறிந்தேன்."

"மூக்கினால்தானே? கண்களால் மணத்தைஅறியவில்லையே."

"இல்லை. கண்களால் மலரின்வனப்பைத்தான் கண்டேன். வாசத்தை மூக்கினால்நுகர்ந்தேன்."

"கண்களால் அழகை அறியமுடியுமேதவிர, வாசத்தை அறியமுடியாது. மூக்கினால் வாசத்தைஅனுபவிக்க முடியுமேதவிர, கண்களால் கனவிலும் முடியாது. கடவுள்எங்கே, அவரைக் காட்டுஎன்று உங்கள்வாய் கேட்கிறது. உங்கள்கண்கள், செவிகள், மூக்குஆகியன கேட்கவில்லை. ஏனெனில், அவைகளால் பேசமுடியாது. கடவுளை மெய்யன்பர்கள் ஞானக்கண்கொண்டு பார்ப்பார்கள். கடவுளை நம்மால் ஞானக்கண்ணால்தான் பார்க்கமுடியும். நீங்கள் முகக்கண்களால் பார்க்கமுயற்சிக்கிறீர்கள். உங்களால்முடியாது. முகக்கண்களால் கண்டால்தான் நம்பிக்கை கொள்ளுவேன்என்று நீங்கள் சொல்லுவது எப்படியிருக்கின்றது, தெரியுமா?"

"சொல், மலர்விழி"

"நான் கண்களால்தான் வாசத்தை அறியவேண்டும்; இல்லையேல் வாசமே இல்லை. நான்மூக்கினால்தான் வனப்பைக்கண்டறியவேண்டும்; இல்லையேல் வனப்பேஇல்லை. நான் வாயினால்தான் இன்னிசையைக் கேட்கவேண்டும்; இல்லையேல் இசையே இல்லை. நான் செவியினால்தான் அறுசுவையையும் அறியவேண்டும்; இல்லையேல் சுவையேஇல்லைஎன்று அறிவிலி ஒருவன் சொல்வதுபோலிருக்கின்றது. இன்னும்தயக்கமா?"

"தயக்கமில்லை, தங்கையே உனக்குத்தமையனான எனக்கு இவையெல்லாம் தெரியாமல் போய்விட்டதே என்று வெட்கப்படுகின்றேன்."

"வேண்டாம். அதுதான் பெண்களின் தனிச்சொத்தாக இருந்துவரு கின்றதே. ஏன் அண்ணா உங்கள்ம[illegible]

(தொடர்ச்சி 8-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புனிதவீரர் பக்கம்



அருமைச் சகோதரங்களே!

ஞான விடயங்களில் இளைஞர் "எல்லாந் தெரிந்த மனிதர்" போல நடந்துகொள்வது நூதனமாகமாத்திரமல்ல, பரிதாபமாகவும் இருக்கிறது. நிலையற்ற சடலத்துக்கு: வருடக்கணக்கிலே படிப்பு, கருகலான சோதனை. ஆத்துமத்துக்கு: வே. ம. த. ப. (வேதத்தை மறக்கும் தராதரப்பத்திரம்). உங்கள் சிக்கலானகேள்விக்குத் திருச்சபையிடம் மறுமொழி கேளுங்கள்; கேளாமல் விடுவது உங்கள் மனச்சாட்சிக்குப் பிழை; அன்றியும் திருச்சபை அன்னைக்கு அவசங்கை.

ஒவ்வொரு கலையிலும் சிறப்படைந்த கத்தோலிக்கர் அநேகர் உண்டு. அவர்கள் செபஞ்செய்த பொழுதும், தேவதிரவிய அனுமானங்களைக் கைக்கொண்ட பொழுதும் தங்கள்புத்தியை வெளியில்விட்டார்கள் எனக் கூறுவது மட்டித்தனம் அன்றோ. அவர்கள் விசுவாசத்தைத்தவிர மற்றெல்லாவற்றிலும் நிபுணர்எனக் கூறுவோர் மூடசிகாமணிகளில் மூத்தசிகாமணிகளாவர்.

வானொலி வைத்து உபயோகிக்கிற நீங்கள், அம்பேர் ஓர் பத்தியுள்ள கத்தோலிக்கர், கல்வானி அர்ச். பிரான்சீஸ்குவின் மூன்றுஞ் சபைக்குச் சேர்ந்தவர், ஓஹம் யேசுசபைப் பள்ளியில் ஓர் பேராசிரியர். வோல்டா நாள்தோறும் அதிகாலையிற் பூசைகண்டு, மாலையில் நற்கருணை சந்தித்து, செபமாலையுடன் உறங்கச்செல்பவர் என அறிந்தால் திருச்சபை விஞ்ஞான வளர்ச்சிக்கு விரோதி எனக் கூறத் துணியமாட்டீர்கள்.

கத்தோலிக்கு திருச்சபை படிப்பிப்பதை எப்படி நம்பலாம் என அறிவாளியான பாஸ்ரெர் என்பவரை ஒருவர் வினவிய பொழுது, "நான் சற்றுப் புத்தியுள்ளவனாகையால் பிரித்தானிய (சிறிய) செம்படவனின் விசுவாசங் கொண்டுள்ளேன்; இன்னும் அதிக புத்தியுள்ளவனாயிருப்பின் பிரித்தானிய செம்படவனின் மனைவியின் விசுவாசத்தைக் கொண்டிருக்கும் பேறுபெற்றிருப்பேனே" எனக் கூறினார்.

அண்ணா.

—※—

## பாதையிற் கண்டெடுத்த பணப்பெட்டி

### கண்டெடுத்தபொருள் பிறருக்குச் சொந்தமன்று

பிரான்சுதேசத்திலே போவேநகருக்குச்சமீபமான ஓர் கிராமத்தில் ஓர்தகப்பனையும், தாயையும், நான்கு பிள்ளைகளையும் கொண்ட மிகவும் வறியகுடும்பமொன்று வசித்திருந்தது. பிள்ளைகளில் மூத்தவனான லூசியன் அப்போது எட்டுவயசு மாத்திரமுள்ள ஓர்பாலியனாயிருந்தான். தகப்பனான கிறூசியன் கூடைகள் இழைப்பவன். அவன் மிகுந்த சாமர்த்தியமும், ஊக்கமும், புத்திசாலித்தனமும் உடையவனாய் இருந்தபோதிலும் தான் இழைக்கும் கூடைகளைவிற்றுக் கிடைக்கும் ஊதியத்தைக்கொண்டு தனதுகுடும்பத்தை மிகவும் அரும்பொட்டாகவே சம்ரட்சணைசெய்துவந்தான். என்றாலும், அவர்கள் பயபக்தியாயும், சந்தோஷமாயும், தங்களுக்குக் கிடைப்பதைக் கொண்டு மனரம்மியமாயும் வாழ்க்கைநடத்தி வந்தார்கள்.

நிற்க, ஓர்நாட்காலை மூத்தபிள்ளைகள்இருவரும் வெளியிலே விளையாடச்சென்று திரும்பியபோது, தங்கள்வீட்டுக்கணித்தாய்க் கிராமப் பாதையின்நடுவில் யாதோகருமையான ஒருபொருள் இருப்பதைக்கவனித்துக் கிட்டச்சென்று பார்த்தபோது, தோலால்சுற்றிக் கட்டப்பட்ட ஏதோஒருபெட்டியைப்போல் அது இருக்கக்கண்டு அதனைத்தூக்க முயன்றார்கள். ஆனால், மிகப்பாரமாய்இருந்தபடியால் அதனைக் கிளப்பியெடுக்க அவர்களால் முடியவில்லை. கடைசியாய்த் தங்கள்பலமெல்லாங் கூட்டி அதனைஇழுத்துப் பறித்து ...டுகொண்டுபோய்ச் சேர்த்தார்...

அப்போது தகப்பன், "அது என்ன கொண்டுவந்தீர்கள்?" என்று ஆச்சரியத்துடன் வினவினான். "பாதையிலே நாங்கள் கண்டெடுத்த ஏதோ ஒருபாரமானசாமான்" என்று லூசியன் விடையிறுத்தான். "சரி, அது என்னவென்று பார்ப்போம்" என்று தகப்பன் சொல்லிக்கொண்டே அதனைச் சுற்றியிருந்த தோலைச் சாவதானமாக வெளியில்எடுத்தபோது அதனுள்ளே மகோக்கனிமரத்தால்செய்யப்பட்ட சிறிய பெட்டியொன்று இருக்கக்கண்டான்.

"ஓ என்ன அழகானபெட்டி" என்று பிள்ளைகள் இருவரும் குதூகலத்துடன் கூறிவிட்டு, "அது எனக்கு" என்றான் ஒருவன். "இல்லை, அது என்னுடையது; ஏனெனில், அதை முதலில்கண்டவன் நானேஎன்றான்" மற்றவன். அதனால் இருவருக்குமிடையில் சச்சரவுஏற்படத் தொடங்கியது. தகப்பன் இடையிற் சென்று இருவரையும் விலக்கிவிட்டுச் சொல்லுவான்:

"ஏன் அவ்வளவாக நீங்கள் ஆத்திரப்படுகிறீர்கள்? பாதையிலே இந்தப்பெட்டியை நீங்கள் கண்டெடுத்தது மெய்தான். ஆனால், உங்களில் எவருக்காவது இது சொந்தமல்ல. கண்டெடுக்கிறபொருட்கள் எல்லாத்துக்கும் நாங்கள் முறைமையான உரிமைக்காரர் ஆவதில்லை. இப்பெட்டியின் உண்மையான சொந்தக்காரன் சென்றஇரவு இந்தப்பாதை வழியாகப் பிரயாணஞ் செய்து கொண்டிருந்தபோது, தற்செயலாக அதனை இழந்துபோனானுக்கும். அவனுக்குநேர்ந்த துர்அதிர்ஷ்டத்தை எங்களுக்கு ஆதாயமாக்கிக்கொள்ளல் நீதியாகாது. அவன் இழந்துபோனதை நாங்கள் கண்டெடுத்தோமென்று கூடியகெதியில் அவன் அறிந்துகொள்ளச் செய்தலே எங்கள் கடமையாகும். அதனால், எங்கள்கிராமப்பத்திரிகையிலே இதைப்பற்றி நாளைத்தினம் ஓர் விளம்பரஞ் செய்வேன்" என்றான்.

தான் சொன்னபடியே அவனும் மறுநாள் விளம்பரஞ் செய்துவிட்டான். அத்துடன் திருப்திப்படாது இழந்துபோன அப்பொருளை எவரேனும் திரும்பிவந்து தேடுகிறார்களோ என்பதைக் கண்டுகொள்வதற்காக அவன் அடிக்கடி வீதிக்குச் செல்லுவதும் திரும்புவதுமாயிருந்தான். ஆறுமாசங்கள் சென்றன. அதன்மேல் அவன் தனது கிராமத்திலே நம்பிக்கைக்குரிய மனிதர்சிலரைத் தனதுகுடிசையிலே ஒன்றுகூட்டி அவர்களுடைய சமுகத்திலே அப்பெட்டியைத்திறந்தபோது அது நிறையத் தொகையான தங்க, வெள்ளி நாணயங்கள் இருக்கக்கண்டு பிரமித்துப்போயினான். இந்த வறிய கூடையிழைப்போன் தனது சீவிய காலத்தில் அத்துணை பெருந்தொகையான பணத்தை முன்னொருபோதுமே கண்டவனல்ல. அதனால் அவன் பெரிதும் ஆச்சரியமடைந்தமை நூதனமன்று. அங்கு வந்தவர்களோ நன்கு ஆலோசித்துவிட்டு அப்பணம் அவனுக்கே உரியதென்று தீர்த்துவிட்டார்கள். அதனால் அவன் தனது குடிசைக்குஎதிரே பாதையின் மறுபக்கத்திலிருந்த பெரியகமத்தை அப்பணத்தின்ஓர்பகுதிகொண்டு விலைக்குவாங்கி அதிலே ஓர்அழகானவீட்டைத் தானாகவேகட்டித் தனது குடும்பத்துடன் சேமமாக வாழ்ந்திருந்தான்.

சிலவருடங்கள் சென்றன. மார்கழிமாசத்திலே, ஓர்நாள் மாலைப் பொழுதிலே, குளிரும் பனியும் கடுமையாயிருக்கும்போது அவனுடைய வீட்டுக்கதவிலே யாரோபலமாகத் தட்டுகிறசப்தம் கேட்டதும் தாமசமில்லாமல் அது திறக்கப்படவே, கடுங்குளிரினால் விறைத்துநடுங்கிய இருபிரயாணிகள் வெளியிலே நின்றுகொண்டு, அன்றிரவு தங்கிப்போக அங்கே தங்களுக்கு இடந்தருமாறு பணிவாகக்கேட்டுநின்றார்கள். அக்ஷணமே இருவரும் உள்ளே அழைத்துக்கொண்டு போகப்பட்டனர். அங்குசென்றதும் கமக்காரன் விருந்தாடிகள் இருவரினதும் குளிரைப்போக்கி அவர்களுக்குக் கனலை உண்டுபண்ணுவதற்காக நெருப்பின்மேல் விறகுசுள்ளிகளை அடுக்கினான். மனைவியோ அவர்களுக்குச் சாப்பாடு சித்தஞ்செய்வதற்காக அடுக்களை சென்றாள்.

(வளரும்)

—(⌣)—

**சுவிசேஷ விளக்கம் 9—.**

## சிலுவையைச் சுமந்து செல்

அன்று சனிக்கிழமை பின்னேரம் நாலுமணிதொடக்கம் மோகனும் துரையும் அயல்வீட்டுப்பையன்களும் கிறிக்கெற் பந்தாடிவிட்டு வியர்க்கக்களைக்க மோகன் வீட்டுக்கு வந்தார்கள். மோகனுடைய பெற்றோர் வீட்டிலிருந்தார்கள். பிள்ளைகளை எதிர்பார்த்திருந்தவர்போல மோகனுடையதாய் பொன்றோஸ் சுடச்சுடவடையும் ஊறுகாய்த் தண்ணீரும் கொண்டுவந்து வைத்தார்.

சுடுவடைஒன்றைக் கடித்துக்கொண்டு "நல்லாயிருக்கிறது குஞ்சிஅம்மா," என்றான் குலசிங்கம். திண்ணைத்தூணுடன் சார்ந்துகொண்டிருந்த ஞானேந்திரன், "இன்னும் வேர்த்துஒழுகுகிறது" என்று சொல்லி நெற்றியில்வடிந்த வியர்வையை வழித்து எறிந்தான். "இனியும் போட்டிக்கு வருவீர்களோ?" என்று பரிகசிப்புடன் கேட்டான் மோகன். "ஏன் நீர் குளித்தமாதிரி வியர்த்துஇருக்கிறதற்கு என்ன சொல்லப்போகிறீர்" என்று மறுத்துக்கேட்டான் குலசிங்கம். அமிர்தநாதரும் குளித்துவிட்டு அங்குவந்து சேர்ந்தார். "விறதர்மார் எங்களைக் கண்டார்களோ என்னமோ" என்றான் ஞானேந்திரன். அவர்கள் விளையாட்டு இடத்திற்குப்பக்கத்தில் செபமாலைத்தாசர் ஆச்சிரமம் ஒன்றிருந்தது. "கூடுமானால் எங்களைப் போல ஓடியாட அவர்களும் விரும்புவார்கள்" என்றான் மோகன். "சீ! அவர்கள் தியானம்பண்ணுகிறது எங்கே; தோட்டஞ்செய்கிறதுஎங்கே. நாம்விளையாட முசிப்பாற்றி பண்ணுவதுபோல அவர்களும் செய்யக் கனவிலும்நினைக்கமாட்டார்கள்," எனக்கூறினான்ஞானேந்திரன். வேட்டியைக் உலரக்கொடியில்கட்டிக்கொண்டுநின்ற அமிர்தநாதர் "ஏன் நினைக்கமாட்டார்கள்? நீங்கள் கும்மாளங்கொட்டுவதுபோல அவர்களும் கும்மாளங்கொட்டிக் குதூகலமாயிருக்க அதிக ஆசை" என்றார்.

"அப்படி நினைக்கிறீர்களா?"

"தடைஎன்ன?"

"ஆனால், நான் நினைத்தேன்"

"கிறிக்கெற் பந்தடிக்கவும், படம் பார்க்கவும், ஆடவும்பாடவும் ஆனந்தங் கொண்டாடவும் உங்களைப்போலவே அவர்களுக்கும் மிகுந்தஆசை ஆவலுண்டு. ஆனால், தங்கள்ஆசை அன்பெல்லாம் கிறீஸ்துநாதருக்குக் கொடுப்பதற்காக இவைகளையெல்லாம் வெறுத்துவிடுகிறார்கள். அவரைப் பின்செல்வதற்காகத் தங்களை ஒறுத்து, சிலுவையைச் சுமக்கிறார்கள். ஆகையால் அவர்களுக்கு விசேஷசம்பாவனை கிடைக்கும்என்பது ஞாபகமிருக்கிறதா? அழுகண்ணர் பாக்கியவாளர். ஏனெனில், ஆறுதல்அடைவார்கள். ஆனபடியால் தான் இந்தச் சந்நியாசிகளும் கன்னியாஸ்திரிகளும் உலகத்திலே அதிக பாக்கியம் நிறைந்தவர்கள்.

குலசிங்கத்துக்கு ஏதோ கடும் யோசனை. குஞ்சிஐயா, கிறீஸ்துவர்கள் எல்லோரும் கிறீஸ்துநாதரைப் பின்பற்ற வேண்டாமா? அதாவது, நாம் எல்லாருக்கும் சிலுவையைச் சுமக்கவும், தபஞ்செய்யவும் கடமை இல்லையா? சந்நியாசிகளுக்குமட்டுந் தானாகடமை?"

(அடுத்தபக்கம் பார்க்கவும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை, எல்லாருக்குந்தான். நாம் எல்லாரும் செபமாலைஆச்சிரமத்தாரைப்போல ஆகாவிட்டாலும், எல்லாருந் தபஞ்செய்யக்கடமை உள்ளவர்கள். நாம் சிலுவையைச் சுமக்கவே வேண்டும். சுமக்கக் கடமை என யேசுஇரட்சகரே கூறியிருக்கிறார்.

"பின்னும் அவர் தம்முடைய சீஷர்களோடு ஜனக்கூட்டத்தை வரவழைத்து, அவர்களுக்குத் திருவுளம்பற்றினதாவது: யாதொருவன் என்னைப் பின்சென்றுவர விரும்பினால், தன்னைத்தானே பரித்தியாகஞ்செய்து, தன்சிலுவையைச் சுமந்துகொண்டு, என்னைப் பின்பற்றக்கடவான். ஏனெனில், தன் உயிரைக் காக்க விரும்புகிறவன் அதை இழந்துபோவான். ஆனால், என்னையும், சுவிசேஷத்தையும்பற்றித் தன் உயிரை இழந்துபோகிறவன் அதை இரட்சித்துக்கொள்வான். மனிதனானவன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும், தன் ஆத்துமத்தைச் சேதப்படுத்துவானாகில் அவனுக்குப் பிரயோசனமென்ன?" (மாற்கு 8 : 34—36.)

—(⌣)—

# மாண்டவள் மீண்டாள்

*(சுவிசேஷ சம்பவமொன்றைத் தமிழ்த் தட்டில் தருகிறார் றெக்ஸ்)*

மீரியாம் என்றொருசிறுமி இருந்தாள். மீரியாமுக்குப் பன்னிரண்டு வயதுதான். எல்லோரும் அவளின் நற்குணத்தைப் புகழ்ந்தனர்.

ஆனால், ஒருமுறை மீரியாமுக்குச் சுகமில்லாமற்போய்விட்டது. அது என்னவெனில் நெருப்புக்காய்ச்சல். வைத்தியர்கள் இருவர்வந்தனர். வைத்தியர்கைவிட்டனர். எல்லோரும் மீரியாம் மரணமடையக் கூடாதெனப் பிரார்த்தித்தனர்.

மீரியாமின் தகப்பனும், தாயும் இன்னும் அதிகமாய்ச் செபங்களை ஒப்புக்கொடுத்தனர். காலையில் பட்டணத்துக்குத் தாய்சென்றபொழுது யேசுஎன்பவரைப்பற்றி அறிந்தாள். அவர் வியாதிஸ்தரைக் குணப்படுத்துவார் என்றும், புதுமைகளைச் செய்வார்என்றும் கூறியதைக்கேட்டாள்.

மீரியாமின் வீட்டுக்குவந்த அடுத்த வீட்டுப் பையன், "மாமி! இன்று தெருவிலே யேசுஎன்றொருவர் ஒரு குருடனைக் குணப்படுத்தினார். பல வைத்தியர்களால் குணப்படுத்தமுடியாத அவனுடைய கண்ணை அவர் குணப்படுத்தினார்" என்றான்.

இதையெல்லாம் கேட்ட மீரியாமின் தகப்பனார் யேசுநாதரைத் தேடிக்கொண்டு ஓடினார். கடைசியில் ஓரிடத்தில் அவரைக்கண்டு அவரது பாதத்தில்வீழ்ந்து, "யேசுவே! என் மகள் மரணப்படுக்கையில் கிடக்கிறாள். அவளைச் சொஸ்தப்படுத்தும்" என்று மன்றாடினான்.

யேசுநாதர் அவனோடு வீட்டிற்குச் சென்றார். அப்பொழுது ராயப்பரும், அருளப்பரும் அவருடன் கூடச்சென்றனர். அவர்கள் பாதிவழி செல்லும்போது ஒருவன்ஓடிவந்து "அச்சிறுமி இறந்துவிட்டாள்" என்றான். அப்போது இராயப்பர் "ஆண்டவரே! நாம்பிந்திவிட்டோம்; சிறுமி இறந்துவிட்டாள். ஆகையால், திரும்பிப் போய்விடுவோம்" என்றார்.

இதை யேசுநாதர் சட்டைபண்ணவில்லை. அவர் அம்மனிதனோடு போய்க்கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் அச்சிறுமியின் வீட்டை அடைந்தனர். அங்கே எல்லோரும் அழுதுகொண்டிருந்தனர். யேசுநாதர் மீரியாமின் தகப்பனோடு வீட்டினுள் நுழைந்தார்.

"ஐயோ! பிந்திவிட்டீர். அச்சிறுமி இறந்துவிட்டாள்" என்று ஒரேகுரலில் அங்குள்ளவர்கள் சொன்னார்கள்.

"அச்சிறுமி இறக்கவில்லை" என்று சொல்லி யேசு அச்சிறுமியின் கையைப்பிடித்தார். சிறுமிஎழுந்தாள். எல்லோர்வாயும் ஆச்சரியத்தால் அடைபட மாண்டவள் — மீண்டாள் .........

## வவுனியாத் தபால்

பரிசுத்தபாப்பரசரின் அப்போஸ்தலிக்க ஸ்தானுபதியாகிய மேன்மை தங்கிய ஜே. ஆர். நொக்ஸ்ஆண்டகை அவர்கள் சென்ற 30-4-58 காலை 9-30 மணிக்கு யாழ்ப்பாணமேற்றிராணியாராகிய மகாவந. ஜே. எமிலியானுஸ் பிள்ளைஆண்டவர்அவர்களுடன் தமது காரியதரிசியான வண. கலிடிசுவாமியவர்கள்சமேதராய் மோட்டார்காரிலே வவுனியா அர்ச். அந்தோனியார் ஆலயமுன் வீதியில் வந்திறங்கியதும் கொடிகளேந்தியவண்ணம் பாடசாலை மாணவர்மாணவிகளும், ஆயிரவருக்குமேற்பட்ட கிறீஸ்துவர்களும் அணிவகுத்து நிற்க, கத்தோலிக்கவாலிப சேவாசங்க உபதலைவரும், கோவில்சக்கிறிஸ்தாமும் முறையே ஸ்தானுபதி அவர்களுக்கும் மேற்றிராணியாண்டவர் அவர்களுக்கும் மாலைசூட்டியபின் வரிசையாகஆலயஞ் செல்லவே ஸ்தானுபதிஅவர்களால் தேவநற்கருணை ஆசீர்வாதமும், பரிசுத்தபாப்பாண்டவரின் ஆசியும் அருளப்பட்டன. பின்னர்அலங்கரித்திருந்த உயர்மேடையில் அவரும் மேற்றிராணியாண்டவரவர்களும், காரியதரிசி சுவாமியயவர்களும், வவுனியாக் கட்டளைக்குரவர் வண. எஸ். வேந்தர் கோன்சுவாமியவர்களும், வவுனியா அரசாங்கஅதிபர், உபஅதிபர், பட்டினசபைத்தலைவர் திரு. பி. தர்மலிங்கம் ஆதியோரும்அமர்ந்திருக்கப் பாடசாலை மாணவர்மாணவிகளினால் நடனகீதங்கள் நடைபெற்றன. அதன்மேல் ஸ்தானுபதியவர்கள் ஆங்கிலத்தில் சொற்பொழிவாற்ற, அதை வண. கட்டளைக்குரவர் தமிழில் மொழிபெயர்த்தார். உதவிஅதிபர் முதலியார்சின்னத்தம்பிஅவர்கள் இனிய தமிழில் ஸ்தானுபதியவர்களின் தகைமைகளை எடுத்துக்கூறினர். பின்னர் ஸ்தானுபதியவர்கள் கத்தோலிக்கவாலிப சேவாசங்கமண்டபத்திற்கு அத்திவாரக்கல்லிட்டுச் சகலரையும் ஆசீர்வதித்துப்பிரயாணமாயினர்.

—நிருபர்.

## இதய கீதம்

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக் காரிருளில் மூழ்கடித்துக் கறுப்பாக்கிக் கொள்வதோடு, உங்கள்தம்பியின் வெள்ளையுள்ளத்தையும் கறுப்பாக்கிவிடுகின்றீர்கள். அவன் அம்மாவைக்கடவுள்உண்டாஎன்று கேட்டான். அவன் அண்ணனை நீங்களோ, கடவுளைக்காட்டு என்கிறீர்கள். எழுந்து போய்க் குளித்துவிட்டுவாருங்கள்."

எழில்மிக்க தன் தங்கையின் அறிவை மனதிற்குள்மெச்சியபடி எழுந்துசென்றான் கலையார்வன்.

வாசம்மூக்கு அறியும்அன்றி
வாய்செவி விழிமெய் தேரா
பேசவாய் அறியும்இன்றிப்
பின்னை ஓர்புலன்தேராது
நேசம்ஆர் தொண்டர் ஞான
நேத்திரம் கொண்டுகாணும்
ஈசனை முகத்தின்கண்ணால்
இகத்தில்யார் காண வல்லார்?

—கவிஞர் வேதநாயகம்பிள்ளை

(ச. வி.)

## Educational (Girls Only)

For Commercial Certificate and Shorthand Typists Examinations contact

M. M. Thuraisingham.

20, Third Cross Street,
Jaffna.

## விற்பனைக்கு!

எம்மிடம் நான்கு முதிர்ந்த மகோக்கனி மரங்கள் விற்பனைக்கிருக்கின்றன. தேவையானோர் மேற்காணும் முகவரிக்கு எழுதவும்.

10-5-58 கட்டளைக்குரவர்,
இளவாலை.

## பிழை திருத்தம்

சென்றவாரக்காவலனில் வெளியான இல. M. B. 1731, கோட்டு விற்பனவு விளம்பரத்தில் 1958-ம்ஆண்டு ஆனிமாதம் 7-ந் திகதி செவ்வாய்க்கிழமை.........விற்கப்படும்என்பதை 1958-ம் ஆண்டு ஆனிமாதம் 17-ந் திகதி செவ்வாய்க்கிழமை...... விற்கப்படும்எனத் திருத்திவாசிக்கவும்.

## சத்தியவேத பாதுகாவலன்

**இலங்கையிலே வெளிவரும்**
**ஒரேயொரு கத்தோலிக்க தமிழ் வாரப்பத்திரிகை.**
**கத்தோலிக்கரை மாத்திரமல்ல, மறுசமயத்தினரையுமே**
**சந்தாதாரராகக் கொண்டது.**
**தனது நாமத்துக்கிணங்கக் கத்தோலிக்க சமயத்துக்கு**
**ஓர் பாதுகாவலனாக விளங்குவது.**
**சமய விஷயங்களை மட்டுமல்ல,**
**சமூக, அரசியல், பொருளாதார, உலகவிஷயங்களையும்**
**எடுத்துக் கூறுவது**
**புனிதவீரர் பக்கத்தையும் சிறப்பாகக் கொண்டுள்ளது.**

வருட சந்தா:

| இலங்கை, இந்தியா | வெளிநாடுகள் |
|---|---|
| ரூபா **5-50** | ரூபா **6-00** |

தனிப்பிரதி சதம் 10

மனேஜர்,
சஞ்சூசைமாமுனிவர் அச்சகம்,
யாழ்ப்பாணம்.



## நன்றியறிந்த ஸ்தோத்திரங்கள்

எனது மகளின் மாங்கல்யம் காணாமற் போய்விட்டது. அர்ச். அந்தோனியாரை இரந்துமன்றாடினேன். அதிசயம்! அவரின் புதுமையால் அப்பொருள் மீண்டும் கிடைத்தது. எனவே, அவருக்கு அடியாளின் நன்றியறிதலைத் தெரிவித்து, நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறேன்.

ம. மேரி

* * *

யேசுவின் திருஇரக்கத்தாலும், பரிசுத்த சதாசகாயநாயகியின் மன்றாட்டாலும் என் ஐந்துவயதுக்குழந்தை உயிர்பிரியும் ஆபத்திலிருந்து அற்புதமாகக் காப்பாற்றப்பட்டதற்காக அவர்களுக்கு எங்கள் தாழ்மையான நன்றி. அவர்களின் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக.

மரியாயின் ஊழியன்
கொழும்பு ம. லூக்காஸ் லோப்பஸ்

* * *

இற்றைக்கு ஒருவருடத்திற்குமுன் ஒரு நாள். அந்திவேளை. பாடசாலையினின்றும் என்நெஞ்சம் பதைபதைக்க வீடு திரும்பிக்கொண்டிருந்தேன். ஏன்என்று கேட்கிறீர்களா? ஆம், அன்று தான் பாடசாலைஅதிபர் நான் எஸ். எஸ். சி. பரீட்சையில்தோற்றத் தகுதியற்றவன் எனக்கூறித் தடைபண்ணியநாள்.

பலநாட்கள் கழிந்தன. என்மனக்கவலையை நன்குணர்ந்தபெரியார்ஒருவர் ஒரு நாள்என்னைச்சந்தித்து, தேறுதல்படுத்தி அறிவுரைகள்கூறி மறுபடியும் என்னைத் தொடர்ந்துபடிக்கும்படி ஏவினார். அப்பொழுது பாடசாலைக்கு மீண்டும்போவதை எண்ணியபொழுது என்மனம் பெரிதும்வெட்கமும். வேதனையும்அடைந்தது. இருந்தும் பெரியார்வாக்கை மதித்து, திருக்குடும்பத்திலும், பரிசுத்த சதாசகாய மாதாவிலும் நம்பிக்கையை வைத்து மீளவும் படிப்பைஆரம்பித்தேன். முன்னில்லாதவிதமான ஓர்புத்துணர்ச்சிஎன் உள்ளத்தில் ஊற்றெடுத்தது, இரவுபகல் படிப்பில் கவனம்செலுத்தினேன்.

பரீட்சைமுடிந்தது. அதன்முடிபுவரும் வரை திருக்குடும்பத்தையும், பரிசுத்த சதாசகாயமாதாவையும் சதாமன்றாடிக் கொண்டுவந்தேன். அதன்பலாபலனை தினத்தாளில்பரீட்சையில்சித்தியெய்தியதாக அறியலானேன். ஆனந்தக்கண்ணீர் உகுத்தேன். இதனை வாசிக்கும் அன்பர்களே! தருணதருணங்களில் நீங்களும் இவர்கள்மேல்நம்பிக்கைவையுங்கள். சுகமடைவீர்கள். நானும், பெற்றோரும் நேர்த்தியின்படி இதைப்பிரசுரிக்கிறோம். இவர்களின்நாமம் புகழப்படுவதாக.

ஓர் பக்தன்

* * *

திருஇருதயநாதரின் இரக்கத்தினாலும், எங்களின் அடைக்கலமும், தஞ்சமுமாகிய பரிசுத்த சதாசகாயநாயகியின் தயவினாலும், இன்னும் அர்ச். சூசையப்பர், அர்ச். அந்தோனியார்இவர்களின் மன்றாட்டினாலும் எங்கள்மகளுக்குவந்தநோய்கள்குணமாயின. நேர்த்தியின்படி பிரசுரிக்கப் பிந்தியமைக்கு மன்னிப்புக்கோருகிறோம். இன்னும் எங்கள்பிள்ளைகள் ஆரோக்கியவாளர்களாயும், கல்விஞானமுள்ளவர்களாயுமிருக்க இரந்துகொள்ளுகிறோம். இவர்களின்நாமம் எல்லோராலும் என்றும் புகழப்படுவதாக.

Batticaloa P. S.

சுமார் 2,800 குருடர்களும், 400 பாரிசவாதக்காரரும் சமீபத்திலே லூர்துபதிக்குயாத்திரைசெய்து திரும்பியிருக்கிறார்கள். பாரிசவாதக்காரரான யாத்திரிகர்கள் சில்லுவண்டிகளிலும், காவுகட்டில்களிலும் அங்கு கொண்டு போகப்பட்டார்கள். இவர்களது யாத்திரையின் முடிவு தினமாகிய சனிக்கிழமையன்று பாப்பரசர்அனுப்பிய செய்தியொன்று வாசிக்கப்படலாயிற்று.

Printed and Published for the Proprietor by NICHOLAS JAMES, residing at No. 20, Fifth Cross Street, Jaffna, at St. Joseph's Catholic Press, Catholic Mission Premises, Main Street, Jaffna, on Thursday, May 15-1958.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org